யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.கி.)

JAFFNA HINDU COLLEGE OLD BOYS ASSOCIATION (UK)

HINDU
JAFFNA COLLEGE
ESTABLISHED A.D 1887

ESTD: 1987

# கலையரசி 2013

# Kalaiyarasi 2013










Jaffna
Hindu
College





யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.இ.)

JAFFNA HINDU COLLEGE OLD BOYS ASSOCIATION (UK)

# கலையரசி – 2013

07- 09 - 2013

## கல்லூரி கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவையியல் கழகமும் இதுவே
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரின கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப்பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.

# Kalayarasie 2013

at

**Walthamstow Assembly Hall**

Forest Road

Walthamstow E17 4JD

*Chief guest :*

**Miss.T.Selvathurai**




## சமர்ப்பணம்

தமிழர் வரலாற்றுடன் இரண்டறக் கலந்து கடந்த 123 ஆண்டுகளாக சுடர்விட்டு பிரகாசிக்கும், இந்து கல்லூரித் தாய், உலகெங்கும் பரந்து வாழும் இந்துவின் மைந்தர்கள் பலர் ஒன்று கூடி தத்தமது நாட்டில் சங்கங்களை உருவாக்கி எல்லோரையும் ஒன்றிணைத்து, அதனூடாக தம்மை வழி நடத்தி, சமுதாயத்தில் நல்ல உயர் நிலைக்கு ஏத்திவிட்ட கல்லூரியையும், கற்பித்த ஆசிரியர்களையும் நன்றி உணர்வோடு, அவர்கள் தம் தேவையறிந்து, சேவையாற்றி வருகின்றது.

அந்த வகையில் 25 ஆண்டு வெள்ளி விழா கொண்டாடிய பெரிய பிரித்தானியா பழையமாணவர் சங்கம், தனது 26வது அகவையில் கால் வைக்கிறது. அந்த வகையில், இதனை சிறப்பிக்கும் முறையில் இவ்வாண்டும் "கலையரசி" விழாவும் அதனையொட்டிய மலரும் வெளிவருகின்றது. இவ்விழா சிறப்புறவும், கழகம் மேலும் வளர்ச்சியடையவும் எல்லாம் வல்ல யாழ் இந்து சிவஞான வைரவர் ஆசி வேண்டி இந்நூல் அவர் பாதம், கழக நிர்வாக சபை சமர்ப்பிக்கின்றது.

நன்றி, வணக்கம்
நிர்வாக சபை – 2013

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 01. | என்னுரை | 06 |
| 02. | லண்டனில் வாழும் பழைய மாணவர்களின் பங்களிப்பில் யாழ் இந்து அன்னையின் வளர்ச்சி - வீ. கணேசராசா(அதிபர்) | 07 |
| 03. | கல்லூரி அதிபருடன் ஒரு செவ்வி - தங்கராஜா தவரூபன் | 11 |
| 04. | யாழ் இந்து அன்னையின் பல்வேறு பரிணாம வழர்ச்சியில் பட்டறிவுப் பகிர்வு - செல்வி. த. செல்லத்துரை | 15 |
| 05. | HISTORY OF HOSTELAND ITS CONTRIBUTION TOWARDS SOCIETY AND EDUCATION - A. F. Mariadas | 18 |
| 06. | யாழ் இந்துவின் நல்லாசான் திரு வி. சிவசுப்பிரமணியம் - திருமதி சாந்தா அன்னபூரணி | 21 |
| 07. | இலங்கையின் கல்விக் கொள்கைகள்: பாடசாலைக் கல்வியை மையப்படுத்திய மாறுதல்கள் - பேராசிரியர் மா.சின்னத்தம்பி | 23 |
| 08. | பள்ளிக்கூடத்தின் மீது காதல் பாடைவரைக்கும்..!க. பிரேம்சங்கர் | 29 |
| 09. | 125ஆம் ஆண்டை நோக்கி யாழ். இந்து - ப. விவேகானந்தா | 31 |
| 10. | தொடர்பாடல் - K SivagurunathaPillai | 35 |
| 11. | My memories of the boarding life at Jaffna Hindu College Hostel - Nadesapillai Selvarajasingam | 38 |
| 12. | எங்கே செல்கிறது யாழ்ப்பாண கல்வி? - பி. பிரதீஸ் | 40 |
| 13. | கல்வி எங்களின் மூலதனம் - கு. பார்த்தீபன் | 65 |
| 14. | The State of Higher Education in the North and the East of Sri Lanka - Roshan Ragel & Arunan Sivanathan | 67 |
| 15. | பல்கலைக்கழக அனுமதியில் யாழ்ப்பாண மாணவர்களின் தற்போதைய நிலை - திருமதி. ச. சுரேந்திரன் | 74 |
| 16. | HISTORIC VISIT BY, HISTORICAL PEOPLE - P. Vivekanantha | 76 |
| 17. | யாழ் இந்துக் கல்லூரி ஒன்றியம் - கே. சிவாஜி | 81 |
| 18. | யாழ். இந்துக் கல்லூரிக்கு கிடைத்த காணி சம்பந்தமான சரித்திர பிரசித்தி பெற்ற ஆவணம் | 85 |
| 19. | இந்துக் கல்லூரிக் கீதங்கள் - ஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார் | 88 |
| 20. | கல்லூரிக் கொடி | 90 |
| 21. | Quarterly Status report on Padipaham Supplementary Clases Project - 2013 | 91 |
| 22. | Life Members of JHC OBA (UK) | 98 |
| 23. | ஐக்கிய இராச்சியத்தில் யாழ் இந்துக் கல்லூரி விளையாட்டுத் துறை உருவாக்கமும் வளர்ச்சியும் Loga Pradhaban & T. Prabaharan - Sulthan | 100 |
| 23. | Secretary Message | 108 |

என்னுரை......

வணக்கம்!

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடா வருடம் எமது கலை, கலாச்சார, பண்பாட்டை மேம்படுத்தவும், பழைய மாணவர்களை ஒன்றிணைக்கவும் 'கலையரசி' என்னும் கலாச்சார நிகழ்ச்சியை நிகழ்த்தி வருகிறோம். அதனையொட்டி மலர் ஒன்றினையும் வெளியிடுவதும் வழக்கமாகிவிட்டது. அந்த வகையில் கடந்த ஆண்டு 'வெள்ளி விழா'வினை சிறப்பாக நடாத்தி முடித்தோம். இன்று 26ஆவது ஆண்டில் அடியெடுத்துவைக்கும் எங்கள் சங்கம் இந்த ஆண்டும் விழா மலர் ஒன்றினை வெளியிட்டு சிறப்பிக்கின்றோம்.

இம் மலருக்கான கட்டுரைகளைத் தந்துதவிய அனைத்து அன்பர்களுக்கும், தமிழ் தட்டச்சுகளை செய்துதவிய கலாநிதி சிவா பிள்ளை அவர்களுக்கும்...

இம் மலர் வெளிவர உந்து சக்தியாக இருந்த நண்பர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தக நிறுவனங்களுக்கும், விளம்பரங்கள் சேகரிப்பதற்குதவிய நண்பர்கள் எஸ். தேவன், எஸ். உமாசுதன், ஆகியோருக்கும், மலர் தயாரிப்பில் எனக்குத் தோழ் கொடுத்த நண்பன் சஞ்சீவ்ராஜுக்கும்...

எனது எண்ணக் கருவை வண்ணக் கருவாக வடித்துத் தந்த ஓவியர், நடிகர் கே.கே. ராஜா அவர்களுக்கும், குறுகிய கால அவகாசத்தில் அச்சிட்டுத் தந்த RS அச்சகததாருக்கும்...

எம்மை ஊக்குவித்து, இம் மலரைப் பெற்றுக்கொண்ட உங்களுக்கும் மலர்க் குழு சார்பாக எனது தாழ்மையான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் அன்புடன்

ப. விவேகானந்தா
07. 09. 2013

# லண்டனில் வாழும் பழைய மாணவர்களின் பங்களிப்பில் யாழ் இந்து அன்னையின் வளர்ச்சி



**வீ. கணேசராசா(அதிபர்)**

B.Com, Dip in Ed. M.Ed, SLPS-I, SLEAS III

**யா**ழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்ற ஆலவிருட்சமானது இந்துக் கல்லூரியில் கற்ற பழைய மாணவர்களின் விழுதுகளினால் நிமிர்ந்து நிற்கின்றது. சர்வதேசத்தில் இயங்குகின்ற பழைய மாணவர் சங்கங்களில் லண்டனில் உள்ள பழைய மாணவர் சங்கம் பாரிய பங்களிப்பினை எமது கல்லூரிக்கு அவ்வப்போது வழங்கி வருகின்றது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தற்போதைய அதிபர் என்ற வகையிலும் எனது அறிவுக்கெட்டிய வகையிலும் பின்வரும் செயற்பாடுகளில் பிரித்தானியாவில் உள்ள பழைய மாணவர்கள் செய்கின்றனர் செய்து வருகின்றனர் என்பது அறிய முடிகிறது.

## 01. புலமைப்பரிசில் நிதியம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுள் வசதி வாய்ப்புக்கள் குறைந்த வறுமை நிலையில் உள்ள திறமை மிக்க மாணவர்களுக்கென உருவாக்கப்பட்ட நிதியமே புலமைப்பரிசில் நிதியம் ஆகும். லண்டனில் வாழும் பழைய மாணவர்களினால் 23 லட்சம் ஆரம்ப நிதியாக கொண்டு இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இந்நிதியத்தில் தியாக சிந்தையுள்ள 58 நன்கொடையாளர்கள் பங்கு கொள்கின்றனர். தற்போது இந்நிதியத்தின் நிலையான வைப்பில் 4147271.50 உள்ளது. இந்நிலையான வைப்பில் கிடைக்கின்ற வட்டி வருமானம் மூலம் தற்போது இனங்காணப்பட்ட 300 மாணவர்களுக்கு மாதாந்தம் 300/- படி 3 மாதத்திற்கு ஒருமுறை 900/- வழங்கப்படுகிறது. இந்த நிதியத்தில் சேரவிரும்புவோர் ஆகக் குறைந்தது 15,000/- ரூபாவை நிலையான வைப்பில் வைப்புச் செய்வதன் மூலம் பங்கு கொள்ளலாம். இந்நிதியத்தின் வளர்ச்சிக்கும் தியாக சிந்தைக்கும் ஆரம்ப வித்திட்டவர்கள் லண்டன் பழைய மாணவர் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

## 02. வறிய மாணவர்களுக்கான விடுதி நிதியம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதியில் கல்வி கற்கும் வறிய பிள்ளைகளின் நிதித் தேவைக்காகவும் விடுதியின் அபிவிருத்தி தேவைக்காகவும் ஆரம்பிக்கப்பட்டதே விடுதி நிதியம் ஆகும். இந்நிதியம் லண்டனில் உள்ள பழைய மாணவர்களினால் 23 லட்சம் ஆரம்ப நிதியாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையான வைப்பு வட்டியிலிருந்து விடுதியில் வாழும் வறிய மாணவர்களின் கல்வித் தேவைக்காக என்ற நியதியின் மூலம் ஏற்படுத்தப்பட்டது. இந்நிதியமானது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பெயரில் உள்ளது.

இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நாட்டில் அசாதாரண சூழ்நிலை காரணமாக விடுதி இயங்காத காரணத்தினால் மாணவர்கள் எவரும் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆதலால் இந்நிதி பயன்படுத்தப்படாமல் இருந்தது. இன்று இந்நிதியத்தில் வட்டியுடன் சேர்த்து ரூபா 6144424.60 நிலையான வைப்பில் உள்ளது. கடந்த நான்கு வருடங்களாக விடுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் உள்ளனர். பல மாணவர்கள் விடுதியில் இருந்து கற்க வசதியில்லாத மாணவர்களும் உள்ளனர். இனிவரும் காலங்களில் இந்நிலையான வைப்பிலிருந்து வரும் வட்டி வருமானத்தை வறிய மாணவர்களுக்கு பயன்படுத்துவதற்கு லண்டன், யாழ்ப்பாணம் பழைய மாணவர் சங்கத்தினர் முன்வருவார்கள் என நம்புகிறேன். இவ் வேண்டுகோளை சகல பழைய மாணவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

## 03. விடுதி புனரமைப்பு

அதிபராக நான் 2005ம் ஆண்டு பதவி ஏற்ற போது விடுதியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்ற அவாவினால் பாழடைந்த நிலையில் இருந்த விடுதியை புனரமைப்பு செய்ய வேண்டும் என லண்டன் பழைய மாணவர் சங்கத்திடம் கோரிய போது அவர்கள் எதுவித மறுப்பும் இன்றி பெருமளவு நிதியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் மூலம் தந்துதவினார்கள். இந்நிதி மூலம் ஏற்கனவே இருந்த விடுதி புணரமைக்கப்பட்டு மீண்டும் புதுப்பொழிவுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிதியில் மிகுதியாக உள்ள பணத்தில் தார்ப்பீப்பா தகரத்தில் அடைக்கப்பட்டிருந்து இடைநடுவில் கைவிடப்பட்ட எவருமே உட்பிரவேசிக்க கூடாது என தடுக்கப்பட்டிருந்த புதிய மூன்று மாடிக் கட்டிடம் முழுமையாக பூர்த்தி செய்வதற்கு லண்டன் பழைய மாணவர்களே ஆரம்ப கர்த்தாக்களாக இருந்துள்ளனர். விடுதி மாணவர்கள் அதிகரிக்கும் போது கட்டிடத்தின் கீழ்ப்பகுதி பாவனைக்கேற்ற வகையில் உள்ளது. தற்போது அதில் நூலகம் இயங்கி வருகின்றது. 3ம் மாடி 90 கணினிகளைக் கொண்ட கணினி விஞ்ஞான கூடமாக உள்ளது. தற்போது கல்வி பயிலும் 2000 இற்கும் அதிகமான மாணவர்கள் பாவிக்கும் கணினி கூடமாக பாவிக்கப்படுகிறது. 2ம் மாடி நவீன முறையில் அமைக்கப்படும் கேட்போர் கூடமாக அமைக்கப்படவுள்ளது. தற்போது இச்செயற்றிட்டம் நிறைவு செய்யப்படாமல் உள்ளது. இதனை பழைய மாணவர்கள் நிறைவேற்றுவார்கள் என நம்புகின்றேன்.

## 04. அதிபர் விடுதி

1890ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் விடுதி ஒன்று இருக்கவில்லை லண்டன் பழைய மாணவர் சங்கம் அதிபர் விடுதி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற அவாவினால் ஏறத்தாழ 1 கோடி ரூபா பெறுமதியான 3 பரப்பும் வீடும் கொண்ட காணி கொள்வனவு செய்யப்பட்டு 2009ம் ஆண்டு அதிபர் விடுதியாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இச்செயற்றிட்டத்தை லண்டன் பழைய மாணவர் சங்கம் பல சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் தற்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நம்பிக்கை நிதியத்திற்கு உறுதி எழுதப்பட்டுள்ளது. ஒரு தேசிய பாடசாலைக்கு இருக்க வேண்டிய சிறப்பு பண்புகளில் அதிபர் விடுதியும் உள்ளதால் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் இச்செயற்பாடு சாதனை என்றே குறிப்பிட வேண்டும்.

## 05. பஸ் கொள்வனவு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பயன்பாட்டிற்கென 38 இருக்கைகளை கொண்ட புதிய பஸ் ஒன்றினை லண்டனில் வாழுகின்ற திரு. க. செவ்வேள் அவர்களும், திரு. ஜெயப்பிரகாஷ் குடும்பமும், திரு. பிரபாகரன் (சுல்தான்) அவர்களினாலும் 30 லட்சம் ரூபாவிற்கு கொள்வனவு

செய்யப்பட்டது. கல்லூரியின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக மாணவர்களின் போக்குவரத்துக்கான பயன்படுத்தப்படுகிறது. இது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பெயரில் உள்ளது. இச் செயற்பாடு லண்டன் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களின் செயற்பாடாகவே கொள்ளப்படுகின்றது.

## 06. விடுதி மாணவர்கள் பராமரிப்பு

வன்னியில் அண்மையில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களினால் பெற்றோரை இழந்த மாணவர்கள் 18 பேரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதியில் சேர்ந்து கல்வி புகட்டி வருகின்றார்கள். லண்டனில் வாழும் பழைய மாணவர்கள் ஒரு பிள்ளைக்கு மாதாந்தம் 5000.∴- வீதம் 18 மாணவளை கடந்த 3 வருடங்களாக சிறப்பாக செயற்படுத்திவருகின்றனர். மாணவர்களுக்குரிய உணவு, உடுபுடவை, ரியூசன் கட்டணம், பாடசாலை வசதிக் கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன மாணவர்களுக்கு செலவழிக்கப்படுகிறது. இம்மாணவர்கள் கற்றல் செயற்பாட்டிலும் மிகச் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

## 07.கணினிக் கொள்வனவு

புதி தாக அமைக்கப்பட்டுள்ள 3ம் மாடி கணினி கூடத்திற்கு பழைய மாணவர் திரு. இராஜலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் பழைய மாணவர் சங்கத்தினூடாக 22 கணினிகளை கொள்வனவு செய்து வழங்கி மாணவர்களின் கணினிக் கல்விக்கு உதவி செய்துள்ளார் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

## 08. இல்ல விளையாட்டுப் போட்டி நிதி உதவி

கடந்த 2 வருடங்களாக எமது வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு ஒவ்வொரு வருடமும் 1 லட்சம் ரூபா என்ற அடிப்படையில் லண்டனில் வாழும் சில பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து நிதி அன்பளிப்பு செய்து வருகின்றனர். எமது கல்லூரிக்கு விஜயம் செய்கின்ற லண்டன் வாழ் பழைய மாணவர்கள் காலத்துக்கு காலம் விளையாட்டு உபகரணங்கள் அன்பணிப்பு செய்து வருகின்றனர். லண்டனில் உள்ள பழைய மாணவர்கள் இங்கு விஜயம் செய்யும் போது ஏதாவது ஒரு பொருளை அன்பளிப்பு செய்ய வேண்டும் என்று மிக ஆர்வமாக இருக்கின்றனர்.

## 09. சர்வதேச மட்டத்தில் எமது மாணவர்களின் பங்களிப்பு

அண்மையில் ஒலிம்பியாட் சர்வதேசப் போட்டியில் எமது மாணவர்கள் தென்ஆபிரிக்கா 136500/-, ஈரான் 84800/- போன்ற நாடுகளிற்கு சென்று வருவதற்கு விமான ரிக்கட் செலவுகளை தாம் பொறுப்பேற்று மாணவர்களை ஊக்கப்படுத்தி சர்வதேச மட்டத்தில் இந்து புகழை நிலைநாட்டுவதற்கு பெரும்பங்காற்றியுள்ளனர்.

## 10. விளையாட்டுத்துறை

கொழும்பு பம்பலபிட்டி இந்துக் கல்லூரிக்கும் எமது கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் துடுப்பாட்டப் போட்டி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினூடாக லண்டன் பழைய மாணவர் சங்கம் நிதி உதவி அளித்து செயற்படுத்தியுள்ளனர். இவ்வருடம் லண்டன் பழைய மாணவர் சங்கம் எமது மாணவர்கள் கொழும்பு சென்று திரும்புவதற்கான செலவாக ரூபா 56,000/- வழங்கி உதவியுள்ளார்கள். எதிர்காலத்தில் இப்பெரும் துடுப்பாட்டப் போட்டிக்கு இலண்டன் பழைய மாணவர் சங்கம் நிதி உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

## 11. மலசல கூடம் அமைத்தல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதி மாணவர்களுக்கென மலசல கூடம் அமைப்பதற்கென லண்டன் பழைய மாணவர்கள் 6 லட்சம் ரூபாவை அன்பளிப்பு செய்துள்ளனர். இச்செயற்றிட்டம் வெகுவிரைவில் செயற்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 12. லண்டன் விஜயம்

லண்டன் வாழ் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமூகத்தின் பேரில் 01.12.2010 லண்டன் வருவதற்கும் அங்கு நிகழ்வுகளில் பங்கு கொள்வதற்கும் 1 மாதம் சகல இடங்களிற்கும் பயணம் மேற்கொள்வதற்கும் லண்டன் பழைய மாணவர்கள் பெருமளவு நிதியினை செலவழித்துள்ளனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மேல் வைத்திருக்கின்ற அக்கறை காணரமாக முன்னாள் பிரதி அதிபர் திரு. பொ. மகேஸ்வரன் அவர்களையும் அழைத்து கௌரவித்துள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் அவர்களிற்கு எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 13. ஞானவைரவர் ஆலய புனருத்தாரணமும் கும்பாபிஷேகமும்

எமது கல்லூரி வளாகத்தில் வீற்றிருக்கும் ஞானவைரவர் ஆலய புனருத்தாரணமும், கும்பாபிஷேகமும் அண்மையில் இனிதே நிறைவு பெற்றுள்ளது. இதற்கும் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினர் ரூபா 160,000/- அன்பளிப்பு செய்துள்ளனர்.

## 14. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு நிதி உதவி (பழைய மாணவர் அன்பளிப்பு)

திரு. ஸ்ரீபத்மநாதன் ஞாபகார்த்தமாக அவரின் நெருங்கிய நண்பரும் வழக்கறிஞருமான சிங்கள பெண்மணி Charmaine Obeysekara அவர்கள் ரூபா 1930000/- வழங்கியுள்ளார். இந்நிதி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பெயரில் நிலையான வைப்பில் மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் கிடைக்கும் வட்டி கல்லூரியின் வளர்ச்சித் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும்.

## 15. மைதான விரிவாக்கம்

2015ம் ஆண்டு எமது கல்லூரியின் 125ம் ஆண்டினை நினைவு கூறும் முகமாக லண்டன் பழைய மாணவர் சங்கம் விளையாட்டு மைதானத்தை புனரமைப்பு செய்வதற்கும் நவீன முறையில் அமைப்பதற்குமான செயற்றிட்டத்தை செயற்படுத்தவுள்ளனர். இதனை அவர்கள் செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

2005ம் ஆண்டிலிருந்து இன்று வரை அதிபராக கடமையாற்றுவதற்கு எனக்கு பக்கபலமாக நின்று கல்லூரி வளர்ச்சிக்கு உதவிபுரிந்த லண்டன் பழைய மாணவர்களிற்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்"

❒❒❒



# கல்லூரி அதிபருடன்
## ஒரு செவ்வி



**செவ்வி கண்டவர்: தங்கராஜா தவரூபன்**
யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவன்
(1990-1998)-கணிதப்பிரிவு

கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளில் மூழ்கியிருந்த அதிபரை மதியவேளை சந்திக்கின்றேன். சர்வசாதாரணமாக கோயில் முன்றலில் ஆசிரியர்களுடன் தேங்காய் உரித்துக்கொண்டிருந்தவரை ஒருவாறு அலுவலகத்துக்குள் அழைத்து சென்று செவ்வி கண்டேன்.

**01. உங்களுடைய கல்வி மற்றும் அதிபர் காலம் பற்றி கூறுவீர்களா?**

எனது ஆரம்பக்கல்வியை நயினாதீவு நாகபூசணி வித்தியாசாலையில் தரம் 1 தொடக்கம் 5 வரையான காலப்பகுதியிலும் தொடர்ந்து இடைநிலைக் கல்வியை நயினாதீவு மகாவித்தியாலயத்தில் கற்றேன். க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு 1971ம் ஆண்டு க.பொ.த.உயர்தரம் கற்க வந்தேன். கலைத்துறையில் கற்று பின்னர் 1974ம் ஆண்டு மே மாதம் 9ம் திகதி பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டதாரி படிப்பினை மேற்கொள்வதற்கு தெரிவுசெய்யப்பட்டேன்.

2005ம் ஆண்டு Nov 21ம் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்றேன். இந்த காலப்பகுதியில் முதுகலைமாணி பட்டத்தினையும் பெற்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கடந்த 9 வருடங்களாக அதிபர் சேவையினை ஆற்றி வருகின்றேன். அண்மையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரத்திற்கும் பதவி உயர்வு பெற்றுள்ளேன்.

**02. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அதிபராக இருப்பது குறித்து உங்கள் கருத்து என்ன?**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அதிபராக இருப்பது இலங்கையில் எல்லோராலும் சாதிக்க முடியாது இந்த கல்லூரியின் அதிபராக கடமையாற்றுவதற்கு பாடசாலை அன்னையின் கல்வி வழிசமைத்திருக்கிறது. இதனை எனக்கு கிடைத்த பெரியபேறாக கருதுகின்றேன்.

**03. தற்போது இந்த கல்லூரியில் எத்தனை மாணவர்கள் எத்தனை ஆசிரியர்கள் என்று கூறமுடியுமா?**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் தற்போது 2 ஆயிரத்து 222 மாணவர்கள் கல்வி கற்று கொண்டிருக்கின்றார் அதேநேரம் நான் உட்பட 90 ஆசிரியர்கள் கடமையில் இருக்கிறார்கள்.

**04. உயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் எமது கல்லூரியினை பொறுத்தவரை எவ்வாறு இருக்கிறது.?**

கடந்தகால பெறுபேறுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது 165 அல்லது 170 மாணவர்கள் வருடாவருடம் பல்கலைக்கழகத்திற்கு செல்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் 3A க்களை பெறுகின்ற பாடசாலையாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளங்குகின்றது. இருப்பினும் 3 பாடங்களிலும்

சித்தியடையாத மாணவர்கள் விகிதமும் உங்கள் பாடசாலையில் இருக்கின்றதே அதற்கு என்ன காரணம் என எல்லோரும் வினாவுகிறார்கள். பெரும்பாலான மாணவர்கள் க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்தவுடன் கணிதத்துறையினை தெரிவுசெய்கிறார்கள். 250 மாணவர்கள் O/L பரீட்சை எடுத்தால் 08 மாணவர்கள் மட்டும் தான் கலைத்துறையினை தெரிவு செய்கிறார்கள். இது தான் இதற்கு காரணமாக இருக்கிறது.

**05. யாழ் இந்துக் கல்லூரியின் விடுதியில் எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு யார் யார் உதவி செய்கிறார்கள்?**

யாழ்ப்பாண இந்துக்கல்லூரியின் விடுதி ஒரு பெரிய வரலாற்றினை கொண்டது. நான் இவ் கல்லூரியில் கல்வி கற்ற காலத்திலிருந்து இவ் விடுதியினை புனரமைப்பு செய்ய வேண்டும் என்று நினைத்தேன். பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் அது நடைபெற்று கொண்டிருந்தது. இப்பொழுது அவ்விடுதியில் 44 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த 44 மாணவர்களில் லண்டனின் பழையமாணவர்களின் ஒன்றியத்தின் ஊடாக 18 மாணவர்கள் விடுதியில் கல்வி கற்கிறார்கள். அந்த மாணவர்களுக்கான வசதியினை செய்து கொடுப்பதற்காக மாதமொன்றுக்கு 5000/= ஒவ்வொரு மாணவருக்கும் வழங்குகிறார்கள்.

**06. பாடசாலையின் கல்வி வளர்ச்சியினை ஒருபடி மேலும் உயர்த்த வேண்டுமாயின் உங்கள் தேவை எதுவாக இருக்கும் அதற்கான முதன்மையான விடயங்களாக எதை கருதுகிறீர்கள்?**

பாடசாலையின் கல்வி வளர்ச்சி குறிப்பிடும் அளவுக்கு உயர்வாகத்தான் இருக்கிறது என்றாலும் அடிப்படை தேவைகளினை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றுகொடுக்க வேண்டிய தேவை எமக்கு இருக்கிறது. எமது விஞ்ஞான ஆய்வுகூடங்கள் யாவும் பழைமையான உபகரணங்களையும் பழைமையான கட்டிடங்களையும் தளபாடங்களையும் கொண்டு இருக்கிறது. நவீனயுகத்திற்கு ஏற்றவகையில் இன்னும் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் மாற்றப்படவில்லை. இந்த நிலையினை மாற்றவேண்டிய தேவை இருக்கிறது. ஏனெனில் சர்வதேசத்திற்கு ஒப்பாக எமது கல்வியினை கொண்டுவரவேண்டிய தேவை இருக்கிறது. அடிப்படை வசதியான மலசலகூட வசதியானது எமது பாடசாலையினை பொறுத்தவரை மிகவும் குறைவாக உள்ளது. இவ்வாறான வசதியினை பழைய மாணவர்கள் சங்கங்கள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் செய்து கொடுக்கவேண்டும். இதைவிட கற்றலுக்கான வகுப்பறை எமது பாடசாலையில் இல்லை என்றே கூறலாம். கற்றலுக்குரிய வளங்களை கொண்ட வகுப்பறை ஒன்றும் காணப்படவில்லை. இதைவிட எம்மை மாற்றியமைப்பதற்கு திறன்களை அதிகரிக்க வெளிநாட்டு பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும்.

**07. அரசாங்கம் அவ்வாறான புலமைப்பரீசில்களை கல்லூரிக்கு வழங்குகிறதா?**

அரசாங்கம் இதுவரையும் எமது கல்லூரிக்கு வழங்கவில்லை ஆனால் கொழும்பில் உள்ள சில பாடசாலைகளுக்கு அவ்வாறு வழங்கியிருக்கிறார்கள் என அறிகிறேன்.

**08. பாடசாலையின் நூல் நிலையத்தினை மாணவர்கள் சரியாக பயன்படுத்தி கொள்கிறார்களா அதன் அபிவிருத்திக்கு நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?**

இரண்டுவிதமான நூல்நிலையங்கள் இருக்கிறன க.பொ.த உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கும் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்குமான நூல்நிலையங்கள் இருக்கின்றன. இவ் நூல் நிலையம் சீரமைக்கப்பட்டு இருக்கிறது எனினும் நூலக உதவியாளர்கள் இல்லை போதுமானளவு புத்தகங்கள் இல்லை.

**09. மாணவர்கள் கல்வியின் போது என்ன சவால்களினை எதிர்கொள்கிறார்கள்?**

மாணவர்களை பொறுத்தவரை கல்வியானது ஒரு சமுதாயத்திற்கு நல்ல மனிதனை உருவாக்குதல் என்ற திட்டத்தில் சமூகத்தில் நல்ல பிரஜையாக வளர கல்வி விளங்கவேண்டும். ஆனால் இப்பொழுது கல்வியானது போட்டிச்சந்தையில் விற்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டு போகிறது. மாணவர்கள் பாடசாலையில் முழு நம்பிக்கையில்லாமல் அரை குறையாக ஒடித்திரிகிறார்கள்.

பாடசாலைவிட்டு வந்த பின்னர் தனியார் கல்வி நிலையங்களை பெரிதும் நாடுகிறார்கள். இரவு 9 மணி வரையும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கிறார்கள். முழுமையான கல்வியினை கற்பதற்கு மாணவர்களுக்கு நேரம் போதுமானதாயிருப்பதில்லை.

**10. உயர்தர மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பழைய மாணவர்களின் பங்களிப்பு என்னவாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்?**

பழைய மாணவர்கள் கற்றலுக்கான உபகரணங்கள் கற்றலுக்கான வசதிகள் வழங்கலாம் வளவாளர்களை அழைத்து உயர்தர ஆசிரியர்களுக்கான மாணவர்களுக்காக செயலமர்வுகள் செய்யலாம். விஞ்ஞான ஆய்வுகூடங்கள் நவீன மயப்படுத்தல் நூல் நிலையத்திற்கு புதிய நூல்களை கொண்டு வருவதன் மூலம் எமது பெறுபேற்றினை அதிகரிக்கலாம்.

இப்பொழுது ஒரு குறைபாடு வந்திருக்கிறது. யாழ் மாவட்டத்தில் க.பொ.த.சாதாரணதரம் உயர்தரத்தில் 1ம் இடத்தினை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பெறமுடியவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. யாழ்ப்பாண இந்துக்கல்லூாயில் க.பொ.த.உயர்தரத்தில் ஆங்கிலமொழி மூலம் கற்பதற்கான நிலை ஏற்பட்டிருக்கிறது.

மிகவும் மீத்திறன் கொண்ட மாணவர்களே இவ் ஆங்கிலத்துறையில் கற்கிறார்கள் அவர்கள் தமக்குரிய 3 பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்க வேண்டிய தேவை இருக்கிறது. இவர்களுக்கான ஆங்கில மொழியில் கல்வியினை வழங்குவதற்கான திறமை எமது ஆசிரியர்களிடம் குறைவாகவே காணப்படுகிறது. ஏனெனில் தமிழ்மொழி மூலம் கற்பிப்பதால் விடை எழுதும் திறமைகளை பெரிதும் மாணவர்களுக்கு வழங்கவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆங்கிலமொழி மூலம் பரீட்சை எழுதுகின்ற பாடசாலையாக எமது பாடசாலை மட்டும் விளங்குகிறது. ஆனால் இவ்வாறான மாணவர்களை தமிழ்மொழிமூலம் மாற்றிவிட்டால் நாம் முதலாம் நிலைக்கு வரலாம் இதை நாம் செய்ய முடியாது. ஏனெனில் ஆங்கிலமொழி மூலம் கற்பதனால் சர்வதேச தரத்திற்கான மாணவர்களை உருவாக்க முடியும். இனிவரும் காலப்பகுதியில் அவர்கள் முதல் நிலையில் வருவார்கள் ஏனெனில் எதிர்காலத்தில் ஆசிரியர்கள் அதற்கான பயிற்சியினை பெற்று விடுவார்கள். இனிவரும் காலங்களில் யாழ் மாவட்டத்திலும் தேசிய மட்டத்திலும் முதல் நிலையினை அடையும் வாய்ப்பு கிடைக்கும்.

**11. இதுவரை காலமும் தமிழ் மொழிமூலம் கற்ற பழைய மாணவர்கள் உலகில் சிறந்து விளங்குகிறார்கள் அவ்வாறு இருக்கும்போது இந்த ஆங்கில மொழிமூல கற்கை பற்றி தனிப்பட்ட ரீதியில் உங்கள் கருத்து என்ன?**

விரும்பிய மாணவர்கள் விரும்பிய மொழி மூலம் கல்வி கற்கலாம் என்றிருந்தாலும் 38 மாணவர்கள் ஆங்கில மொழிமூலம் கல்வி கற்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தாங்களாகவே மொழியினை தெரிவுசெய்தார்கள். நாங்களாக ஒருவரையும் கட்டாயப்படுத்த

வில்லை. மாணவர்கள் ஆங்கில மொழிமூலம் கற்பதனை சமுதாயத்திலே ஒரு அந்தஸ்தாகவே கருதுகிறார்கள். தமிழ்மூலம் கற்கும் மாணவர்களுடன் சேர்வதற்கு கூட தயங்குகிறார்கள். சிறந்த பெறுபேறுகளை பெறுவதில் இது ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது.

**12. கே.கே.எஸ் வீதி விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனால் பிரார்த்தனை மண்டபத்திற்கு ஏதும் பாதிப்பு ஏற்படுகிறதா ஏற்படஇருக்கிறதா?**

பிரார்த்தனை மண்டபத்தின் முன்பக்கம் உடைக்க வேண்டும் என ஆரம்பத்தில் சொன்னார்கள். நாங்கள் ஒரு கடிதத்தினை அனுப்பியிருந்தோம். இது பழைமை வாயந்த கட்டிடம் புகழ் பெற்ற கட்டிடம் உடைக்கப்பட கூடாது என கூறியிருந்தோம். வீதி போடப்பட்டுவிட்டது. இது பெரும்பாலும் நூற்றாண்டு கட்டிடம் என்ற வகையில் உடைக்கப்படமாட்டாது என்று நாம் நம்புகிறோம்.

**13. மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியானது எப்படி இருக்கிறது?**

வளர்ச்சிக்கு மாணவர்களுக்கு சேவைக் கழகங்கள் சங்கங்கள் அமைத்து கொடுத்திருக்கிறோம். எங்களுடைய மாணவர்களின் வளர்சிக்கு சங்கங்களும் கழகங்களும் துணையாக இருக்கின்றன. சேவைக்கழகம் சாரணியர் உட்பட 28 கழகங்கள் இருக்கிறன. இத்தகைய கழகங்கள் பாடசாலை மாணவர்களின் வளர்சிக்கு உதவியாக இருக்கின்றன.

**14. பாடசாலையின் கலைத்துறை வளர்சியினை பொறுத்தவரை எவ்வாறு இருக்கிறது?**

இப்பொழுது தமிழ் தின போட்டியினை பொறுத்தவரை எமது பாடசாலை முதல் நிலையில் இருக்கிறது. நாம் வலயமட்டம் மாகாண மட்டம் என சாதிக்கின்றோம். தேசியமட்டத்திற்கு 5 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் அதே போன்று ஆங்கிலத்துறையிலும் தேசியமட்டம் வரை செல்கிறோம். மொழித்திறனாலும் இசைத்துறையிலும் எமது மாணவர்கள் முன்னிலையில் இருக்கிறார்கள்.

**15. பணியின் இறுதிக்காலத்தில் உள்ளீர்கள். இறுதியாக இந்த கல்லூரிக்கு நீங்கள் என்ன செய்துவிட்டு போகவேவண்டும் என கருதுகின்றீர்கள்?**

பழைய மாணவர்களின் உதவியுடன் என்னால் இயன்றளவு கடமைகளை செய்திருக்கிறேன். நான் அடுத்தவருடம் ஆவணியுடன் ஓய்வுக்கு செல்கிறேன். கல்லூரியின் முன்மதில் சுவர் மற்றும் அரச உதவியில் உருவாகும் கல்லூரிவீதி கட்டடம் முழுமையாக முடிக்கப்படவேண்டும் எனவும் விரும்புகின்றேன்.

❒❒❒

# யாழ் இந்து அன்னையின்
# பல்வேறு பரிணாம வழர்ச்சியில் பட்டறிவுப் பகிர்வு

**செல்வி. த. செல்லத்துரை (சங்கீத பூஷணம்)**
**வாழ்நாள் இசை ஆசிரியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

**சு**ழலும் பூமிப்பந்தில் உலகமயக் கல்வி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வேகமாக மாற்றமடைந்து வளர்ந்து வருகின்றது. அதற்கேற்ப அறிவுசார் புலமைக்கும் ஆற்றலுக்கும் ஆளுமைச் சிறப்புகளுக்கும் ஈடு கொடுத்து முறைமை தவறாமல் அறிவை வளர்த்து தமிழர்களின் முன்னோடிக் கல்வித் தாயாக அறிவூட்டி வருகின்றாள் யாழ் இந்து அன்னை, இதற்கு ஊர் உலகமெல்லாம் சாதனை படைத்து மிளிரும் மாணவர் சான்று பகர்கின்றனர்.

இத்தகைய பெருமையும் மகிமையும் பெற்ற இந்து அன்னையுடன் எனக்கு நான்கு தசாப்தங்களாக நீடித்த தொடர்பை எண்ணி நினைந்து உள்ளமுறுகுகின்றேன். கிடைத்தற்கரிய உன்னதமான இத்தொடர்பு ஔவையாருக்கு அதியமான் அளித்த நெல்லிக்கனி போல யாழ் இந்து அன்னை எனக்கு அளித்திருக்கின்றாள் என்று என் சக ஆசிரியர்கள் மகிழ்வுடன் கூறுவது இரட்டிப்பு மகிழ்ச்சியளிக்கின்றனது.

மேலும் 19ஆம், 20ஆம், 21ஆம் நூற்றாண்டுகளில் முறையே ஆன்மீகத் தலைவர் சுவாமி விவேகானந்தர் அகிம்சாமூர்த்தி, மகாத்மாகாந்தி, அறிவியல் மேதை அப்துல்கலாம் ஆகியோரது பாதச் சுவடுகளூடாகப் பதித்து அதிவலைகளாக வலுவூட்டி கல்லூரியின் பெருமைக்கு மகிமையளித்து வருகின்றது. அச்சத்தியை என் உள்ளுணர்வுகளால் உணருகின்றேன். இவர்களது தரிசனம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மாணவர்களின் பண்புகளின் மாற்றத்தை விருத்தி செய்யும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் உலக சாதனையாளராகவும் சிறந்த கல்விமான்களாகவும் உயர்ந்த பதவி வகிப்பவர்களாகவும் வியக்கத்தக்க விருதுகளைப் பெறுபவர்களாகவும் உலகெல்லாம் திகழ்ந்து வருவதற்கு உல்விக்குரிய ஆட்சி வீடாக நல்வழிப்படுத்தி வருகின்றாள் கல்லூரி அன்னை.

ஒரு சமுதாயத்தின் எதிர்காலச் சொத்தாக மாணவர்களே கருதப்படுகின்றார்கள். இச்சொத்துக்களின் எதிர்காலம் அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. இவர்களை வளமானவர்களாக ஆக்க வேண்டிய பாரிய பொறுப்புக்கு குறிப்பிட்ட முத்தரப்பினரும் செவ்வனே செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படும் பொழுதுதான் சமுதாயத்திற்குரிய நற்பிரசைகளை உருவாக்கலாம்.

யாழ் இந்து அன்னையுடன் இணைந்த எனது வாழ்க்கைப் பணத்தில் எல்லார் உள்ளத்திலும் நல்லன ஏற்று நல்வழிப்படுத்திய அதிபர்கள் கடமையாற்றியுள்ளார்கள் என நினைக்கின்றேன். அதிபர்களின் சேவைகளும் கடமைகளும் காலத்திற்கும் சூழலுக்குமேற்ப பல்வேறு தரப்பட்ட தேவைகளாக இருந்தன. சமுதாயத்தின் எதிர்காலச் சொத்துக்களை பாதுகாக்க அதிபர்கள் மதிநுட்பத்துடனும் ஏனைய திறன்களுடனும் கடமையாற்றினர். மாணவர்கள் என்றும் உயர்ந்த கல்விப் பேறுபேற்றைப் பெற்று முன்னிலையில் இருப்பதற்கு அதிபர்களது ஆலோசனையும் வழிகாட்டலுமே நிறைவான கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டது. காலச்சூழ்நிலையில் விதைத்த பயிர்களின் வினைத்திறன்கள் மாறுபட்டிருந்தாலும் ஒவ்வொரு அதிபர்களிடத்திலும் தியாகம் அர்ப்பணிப்பு நேர்மை என்பவற்றுடன் சமுதாயப் பற்று மிக்க செயற்பாடுகள் நிறைந்திருந்தன.

அதன் காரணமாக கணித விஞ்ஞான வர்த்தக கலைத்துறையுடன் நவீன தொழில் நுட்பத்தகவற்றுறையும் பல்வேறு பரிமாணங்களில் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளன. மாறிவரும் உலகக் கல்விக்கேற்ப மாற்றமடைந்து வருகின்றது. இதற்கு கடந்தகால சிறந்த கல்விப் பெறுபேறுகள் இதற்குச் சான்று காட்டுகின்றன.

நான் அந்த வகையில் முதன் முதலில் கண்ட அதிபர் அமரர் இ.சபாலிங்கம் அவர்கள் கண்டிப்புடனும் கரிசனையுடனும் கல்லூரியை நேசித்தவர். அதிபர் அமரர் P.S.குமாரசாமி அவர்கள் ஒவ்வொரு மாணவர்களையும் பெற்றோர்களையும் மனதில் பதித்து பெயர் சொல்லி அழைத்து வரலாறு முழுவதையும் கூறுமளவுக்கு கல்லூரியுடன் ஒன்றிப் போனவர். அதிபர் ச.பொன்னம்பலம் அவர்கள் புகழ்பூத்த இரசாயனவியல் பாட ஆசானாகவும் கல்லூரியின் சமய கலாசார ஆசாரங்களையும் போற்றி வளர்த்து நெறிப்படுத்தியவர். அவரைத் தொடர்ந்து கடமையாற்றியவர் அமரர் திரு.க.குகதாசன் கல்லூரியை இராஜதந்திரமாக வழிப்படுத்தி காலமாற்றச் சூழ்நிலைக்கேற்ப தன்னை இசைவாக்கி சுருங்கக் கதைத்து விடயங்களைச் சாதித்தவர். அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் மாணவர் முன்னேற்றத்தை தன்பலமாகக் கொண்டு கல்லூரியின் கட்டமைப்பை நவீன மாற்றத்திற்காக தெளிந்த இறுக்கமான செயற்பாட்டில் வழிப்படுத்தினார். அதிபர் திரு. அ.சிறீக்குமாரன் அவர்கள் நேர்மைத்தன்மையுடன் பக்கசார்பில்லாமல் ஆன்மீகச் சிந்தனையுடன் அசாதாரண முரண்பட்ட சூழ்நிலைகளுக்கு மத்தியில் செயற்பட்டு கல்விப் பெறுபேற்றில் வெற்றி கண்டவர். இன்றைய அதிபர்.வீ.கணேசராசா அவர்கள் கல்லூரியின் மகத்துவத்தை மேன்மேலும் புதமெருகூட்டி அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். வகுப்பறைகளில் நல்ல போதனைகளையும் விளையாட்டுத்துறையில் சாதனைகளையும் நிலைநாட்டி வழிப்படுத்துகிறார். அதிபர் P.S.குமாரசுவாமி அவர்களை 'படபஸ்' என்று அவரது சேவையை விதந்து பெருமையுடன் அழைப்பது போல திரு.வீ.கணேசராசா அவர்களை 'கட்டடக் கணேசு' என்று அப்பட்டமாக பலரும் பெருமையுடன் பேசி வருவதை கேட்டிருக்கின்றேன். நிலையான சுவடுகளாக அவர் முயற்சியில் கட்டப்பட்ட கட்டடங்கள் என்றும் அவரது சேவையை நினைவுபடுத்தும்.

மேலும் நயினை அம்மன் அருளாட்சி பெற்ற வீரவாகு சரஸ்வதி அம்மையாரின் வயிற்றில் கருக்கொண்டதினால் அதிபர் திரு.வீ.கணேசராஜா அவர்கள் கருணையுள்ளத்துடன் மாணவர் உறுபசி தீர்த்தும் வருகிறார் நயினை அமுதசுரபி அன்னசத்திரத்தில் பெற்ற பயிற்சியினால் யாழ் இந்து விடுதியை அன்னசாலையாக அமுது சுரந்து கொண்டிருக்கின்றது எத்தகைய இடங்களையும் இடையூறுகளையும் நீக்கி சட்ட திட்டங்களுக்கு வேறுபட்டு மாணவர் பசியை தீர்த்து வருகிறார். "உறுபசியும் ஓவாப்பிணியும் செறு பகையும் சேராது இயல்வது நாடு" என்ற வள்ளுவன் வாக்கைதாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறார் என்பது மிகையல்ல இவை புகழுரைமல் பொருளுரையேயாகும்.

அதிபர்கள் பலதரப்பட்ட காலச் சூழ்நிலைக்கேற்ப ஆன்ற அறிவுடனும் கடமையுணர்வுடனும் செயற்பட்டதாலேயே கல்லூரி அன்னை என்றும் மேன்மையடைந்து விழுப்பம் பெற்று ஊரும் உலகும் போற்ற தலைநிமிர் கழகமாக நிமிர்ந்து நிற்கின்றாள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அன்னையின் தேரை தகைசால் சான்றோர்களாகவும் கல்வி மான்களாகவும் வளிங்கிய ஆசிரியர்கள் வடம் தொட்டு இழுத்தார்கள். அவர்கள் நடந்த காலடிகளின் மேல் பின் தொடர்ந்து காலடி வைத்து நடக்கும் பொழு உள்ளாந்த பேரறிவு உருவாகவல்லது வித்திடாமலே விளையவல்லது கல்லூரியில் தனியொரு பெண் ஆசிரியையாகக் கடமையாற்றிய காலத்தில் மூத்த ஆசிரியர்களும் சக ஆசிரியர்களும் என்னை தங்கச்சி என்று வாஞ்சையோடு அழைத்து அறிவுரை கூறி ஆலோசனை வழங்கும் வார்த்தைகள் இன்றும் என்காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அன்றைய இன்றைய காலவோட்டத்தின் மாற்றநிலை மனக்கவலையை தருவதாகவே அமைகிறது. வன்மமும் வஞ்சனையும் முரண்பட்ட சமுதாய வாழ்க்கை முறைகளும்

இன்றைய இளம் சமுதாயத்தில் ஏதோ ஒரு வகையான பிறழ்வுகளை ஏற்படுத்தி வெறுப்பை உருவாக்கும் நடத்தைகளும் போக்குகளும் வளர்ந்து வருகின்றன. ஒரே குடும்பமாக நேசித்த ஆசிரியர்களைக் கண்ட எனக்கு இன்றைய காலத்தின் கோலங்களும் தளர்வுகளும் புரியாத ஒரு வியப்பை ஏற்படுத்துகின்றது. அன்று ஆசிரியர்களோடு அன்பாக பழகி ஒருவருக்கு ஒருவர் ஒப்புரவு வழங்கி கல்லூரி அன்னையின் முற்னேற்றத்தை ஆரோக்கியமாக வளர்த்தனர். இவ்வேளையில்

புல்லவையுன் பொச்சாந்தும் சொல்லற்க நல்வையுன்

நன்கு செலச் சொல்லுவார் என்ற வள்ளுவரின்

வாக்கு அறிவுறுத்தும் கருத்தையும் உளம் கொள்ளுகின்றேன்.

நாட்டில் கடந்த காலத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைக் காரணமாகக் கருதுகோளாகக் கொள்ளாமல் மலர வேண்டிய மொட்டுக்களை வாட விடாமலும் நாசம் செய்யாமலும் பாதுகாக்க வேண்டும் இளம் சந்ததியினர் மத்தியில் எழும் ஆரோக்கிய கல்வி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கல்விமான்களாகவும் புலம் பெயர்ந்த பழைய மாணவர்களாகவும் உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டும் அவர் செய்வார் இவர் செய்வார் என்று தட்டிக்கழித்தால் யாவற்றையும் இழந்து கவலைப்பட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக நேரிடும்.

எல்லாவற்றிற்கும் மேலாக கல்லூரி தோன்றா முன்னமே மாமரத்திற்கும் கொன்றை மரத்திற்கும் அடியில் அமர்ந்தும் வெவ்வேறு இடங்களில் ஆலயம் அமைக்கப்பெற்றும் ஊர்மக்களை காத்துக்கொண்டிரந்த ஞான வைரவப் பெருமானுக்கு கல்லூரி வளாகத்தில் தற்போதுள்ள ஆலயத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அதிபர் அமரர் P.S. குமாரசாமி அவர்களின் உள்ளத்தில் உதித்து தனித்தும் நம்பிக்கையுடனும் துணிந்து புதிய இடத்தில் ஆலயத்தை அமைக்க அத்திபாரமிட்டு நண்பர்களாகிய ஆசிரியர்களுடன் இணைந்து அழகிய ஆலயத்தை அமைத்தார். இவ்வாண்டு மிக அழகாக புதுமெருகுடன் புனரமைக்கப்பெற்ற ஆலயத்தில் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பாபிஷேகம் மூன்றாவது தடவையும் இனிதே நிறைவேறியுள்ளது எனவே கல்லூரி அன்னைக்கு ஒளிமயமான எதிர்காலம் புலப்படுகின்றது. எல்லாம் வல்ல சிவஞான வைரவப்பெருமானை தினமும் வேண்டிப் பிரார்த்தித்து சீரும் சிறப்புமாக வாழக் கடவோம்.

❒❒❒



# HISTORY OF HOSTEL AND ITS CONTRIBUTION TOWARDS SOCIETY AND EDUCATION

**A. F. MARIADAS**
Member of hostel development committee

Hostel or a boarding is the place where students stay some or part of their school life under the supervision of a boarding master. During this time students are provided accommodation and meals. Accommodation is provided in the form of dormitories (study bedrooms) refectory (dining room) where meals provided at a fixed time, a library, cubicles where they can do their homework.

The practice of sending their children to boarding schools started in medieval times going back to over a thousand years, in the West and East. In the east the aristocratic children were sent to spend their adolescence to learn arts, philosophy, and spiritualism, under the guidance of a guru.

In Europe the practice of sending children to be taught by literate clergymen in the monasteries is a medieval concept that was recorded back to AD 597 .Over the 1000 years of history the purpose of a boarding school had changed and evolved. It is sometimes referred that "THE PRESENT DAY'S SCHOOL IS THE OLDEST BOARDING SCHOOL".

Boarding schools became popular during the British colonial administration abroad. The colonial officials were able to ensure their children were brought up in British culture at a boarding school in Britain whilst they served abroad. Those who chose to live with their families in the colonies, built boarding schools for their children in those countries, so that their children can be brought up collectively together in their British culture.

In Britain, boarding schools helped them maintain class system successfully. Some popular universities preferred students from upper class boarding schools which enabled them to reproduce the class system. The high social hierarchy was maintained by sending their children to such boarding schools.

Students who came out of such universities were naturally able to become politicians and often various highly regarded positions in the society. This attracted families who value power, towards boarding schools system. They socialised with the same class and their children mingled with the children of similar social class.

One of the reasons sometimes stated for sending children to boarding schools is to develop wider horizons than their family can provided. Such stated reasons may conceal other reasons for sending a child away from home. These might apply to children who are considered too disobedient or underachieving; children from families with divorced spouses, and children

to whom the parents do not much relate. These reasons are rarely explicitly stated, though the child might be aware of them

Boarding schools have played significant role in controlling them and managed control their emotional lives which adolescents would consider as intrusive. This boarding school socialization is carried over well after leaving school and into their dealings with the social world. Thus it develops boarding school students to adhere to values of elite social class from which they come from or to which they aspire to be part of.

Most societies around the world decline to make boarding schools the preferred option for the upbringing of their children

The elitist tradition of elite preparatory boarding schools has declined due to the development of modern economy and the political rise of the liberalism.

The aspect of boarding school life with its round the clock habitation of pupils with each other in the same environment, involved in studying, sleeping and socializing leads to pressures and stress in boarding school life. This created hyper-competitiveness of use of illegal drugs, causing psychological depression that may result in suicide attempts.

Studies have shown living in such environment had affected their interaction with the social relationships. Psychological studies have shown hostels became less popular for psychological reasons as it was believed that children would miss out on their parent's love and affection while growing up.

However, boarding schools are one of the preferred modes of education in Commonwealth countries such as Sri Lanka, India, Pakistan, Nigeria Ghana, and some other African countries.

In Sri Lanka the concept of sending children to boarding schools continued for several reasons. Undeniably the social upper class sent their children to such schools so that they become able to mingle with the same class and hold higher positions in the social hierarchy. Southern Sri Lankan boarding schools are a classic example of such situation.

There are other more important and crucial reasons why a Sri Lankan parent would send their child to a boarding school or prefer them to grow up in such environment where we VALUE EDUCATION AND PERSONALITY DEVELOPMENT as priorities in our children's growth..


A boarding school would encourage growth and will eliminate much negativity that would hinder their growth. A child growing in a hostel would be encouraged to show high level of self discipline, punctuality. He would learn to be responsible, manage the resources that are available to him efficiently and organise his life properly. Such environment helps him in developing leadership qualities and interpersonal skills. A typical student who stays and studies would carry school's ethos forever.

They become personalities with great compassion, caring and sharing, appreciating others strengths and weaknesses.

There are other reasons why a parent would choose their child to stay in the hostel and complete their studies. When the need to be more focused and concentrating on at times of

revision for their main exams, or having to travel long distance to get to the school. In such circumstances a good hostel should solve their problem.

For an under-privileged child it provides the suitable and stable environment that he lacks in his own home. There may be many reasons that their parents could not provide them the suitable set up for them to pursue their studies. The negative aspects that hinder their academic achievements can be poverty, ignorance of their parents. Poverty can stop them getting the right nutrition they need for studying and participating in physical educational activities. Some students might not get the same environment as their fellow students due to ignorance of their parents. For such children the student hostel would be the ideal place to become successful in their lives.





# யாழ் இந்துவின் நல்லாசான் திரு வி. சிவசுப்பிரமணியம்

திருமதி சாந்தா அன்னபூரணி (நாட்டியவிசாரதா)
அதிபர் - ஸ்ரீ மீனாட்சி பரதநாட்டியப்பள்ளி

**ந**மது அன்புக்கும், மரியாதைக்குமுரிய சிவசுப்பிரமணியம் மாஸ்டர் இறைபதமெய்திப் பத்து மாதங்களாகின்றன. மாஸ்டருடனான தொடர்பு எனது சிறுபிராயத்திலேயே ஆரம்பமானது. என்னுடைய அப்பா முத்துக்குமாரன் மாஸ்டரும், சிவசுப்பிரமணியம் மாஸ்டரும் மிக நெருங்கிய நண்பர்கள். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்கள். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சாரணியத்தில் அழியாப்புகழ் பெற்றிருப்பவர்கள்.

என்னுடைய அப்பாவுக்கும், மாஸ்டருக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தொழில் செய்த இடம் மட்டுமல்ல! அவர்கள் வணங்கிய ஆலயம், அவர்கள் வாழ்ந்த வீடு, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியே அவர்களுடைய வாழ்க்கை.

என்னுடைய அப்பா இந்தியா சென்று வந்தால் முதல் வேலையாக இந்தியக் கோவில் விபூதி, பஞ்சாமிர்தம் என்பவற்றுடன் மாஸ்டர் வீட்டுக்கு புறப்பட்டுவிடுவார்.

எனது சிறுபிராயத்திலே மாஸ்ரருடனும், அன்ரியுடனும் ஆரம்பித்த தொடர்பு அனுராதபுரம், அளவெட்டி எனத் தொடர்ந்தது. மாஸ்டர் அவர்கள் அனுராதபுரம் விவேகானந்தா கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் அங்குள்ள மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துவதற்காக வெவ்வேறு இடங்களிலிருந்து திறமையான ஆசிரியர்களை அங்கு கொண்டுவந்து சேர்க்கும் நிர்வாக வல்லமை கொண்டவராகக் காணப்பட்டார். கொழும்பில் கல்வி அமைச்சில், அனுராதபுரத்தில் கல்வித் திணைக்களத்தில் பணிப்பாளர், அதிகாரிகள் எனப் பலரிடமும் அன்பாக பழகி காரியங்களை சுலபமாகவும், வேகமாகவும் முடித்துக் கொள்வார். அந்தவகையிலே என்னையும் அவரது பாடசாலையிலே நடன ஆசிரியராக சேர்த்துக் கொண்டார். 1977ல் இனக் கலவரங்கள் ஏற்பட்டபோது பிறமாவட்டங்களிலிருந்து அனுராதபுரத்திற்கு வந்திருந்து கடமையாற்றிய ஆசிரியர்களை ஒரு தந்தையைப் போன்று பாதுகாத்தார். இனக்கலவரங்கட்குப் பின்னர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் அதிபராப் பொறுப்பேற்றுக் கொண்டபோது என்னையும் அங்கு நடன ஆசிரியையாகச் சேர்த்துக்கொண்டார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் எத்துணை அர்ப்பணிப்புடன் சேவையாற்றினாரோ அதேயளவு அர்ப்பணிப்புடனேயே அனுராதபுரத்திலும், அளவெட்டியிலும் சேவையாற்றினார். அனுராதபுரத்தில் இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ மதங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகள் கல்விகற்றனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்துப் பாரம்பரியத்தில் வளர்ந்த மாஸ்டர் அனைத்து மதப்பிள்ளைகளையும், அவர்களுடைய மதநம்பிக்கைகளுடன் அரவணைக்கும் பாங்கு கண்டு பலதடவைகள் வியந்திருக்கிறேன்.

1980ம் ஆண்டில் நைஜீரியாவுக்குச் செல்கின்ற வரையிலும் மாஸ்ரருடைய பாடசாலைகளில் நடனஆசிரியையாகப் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றேன். எனது ஆசிரியப் பணியில் நல்லதொரு வழிகாட்டியாக ஆசானாக, ஆலோசகராக மாஸ்ரர் திகழ்ந்தார்.


நைஜீரியா, சீசெல்சு, நியூசீலாந்து என எங்குவாழ்ந்தாலும் மாஸ்ரருடனும், அன்ரியுடன் தொலைபேசியில் பேசிக் கொள்வேன். இடையில் ஒருவருடம் அய்யனார் கோவிலடியில் போய் இருந்தார்கள். யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது அவர்களுடன் பலவருஷங்கட்கு பின்னர் நேரில் பேசிமகிழும் வாய்ப்புக் கிடைத்தது. அதன்பின்னர் நியூசீலாந்தில் இருந்தார்கள். நியூசீலாந்திலிருந்து 2012 யூலையில் விடுமுறைக்காக சிசெல்சுக்குப் புறப்படுவதற்கு முதல்நாளும் பேசினேன். சுகமாகப் போய்வாருங்கள். நியூசீலாந்துக்கு வந்து உங்களைச் சந்திப்பேன் என்று சொல்லி மாஸ்ரரிடமிருந்து விடைபெற்றேன்.

மாஸ்ரர் நேசித்த சிசெல்சுக்குச் சென்று அங்குள்ளவர்களோடு சிலகாலம் தங்கியிருந்து நியூசீலாந்திற்கு புறப்படுவதற்கு முதல்நாள் இரவே சளி காரணமாக மருத்துவமனை சென்றிருந்தார். அதிலிருந்து ஒருசில தினங்களில் இவ்வுலக வாழ்வை நீத்தார். சுமார் கால்நூற்றாண்டுகளாக வாழ்ந்த மண்ணிலேயே அவரது உயிர்பிரிந்தது. சிசெல்சிலேயே ஒரேயொரு இந்துக்கோவில் நிர்மாணத்தில் தன்னை முழுமையாக அர்பணித்துக் கொண்டவர். கும்பாபிஷேகத்தில் மாஸ்ரரும் அன்ரியுமே சங்கற்பம் செய்து சீசெல்ஸ் வரலாற்றில் தனியான இடத்தைப் பெற்றுள்ளார்கள் என்பதில் மிகவும் பெருமையும், மகிழ்வும் அடைகின்றேன்.

மாஸ்டரின் யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியில் தொடங்கிய பயணம், நைஜீரியாவிலிருந்து நியூசிலாந்து வரை வாழ்ந்து, இந்துசமுத்திரத்தின் குட்டித்தீவான சிசெல்சில் முடிவடைந்திருக்கின்றது. சிவசுப்பிரமணியம் மாஸ்ரருடைய வாழ்வு எமக்கெல்லாம் நல்வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

❒❒❒

**அமரர் வி. சிவசுப்பிரமணியம்**



# இலங்கையின் கல்விக் கொள்கைகள்: பாடசாலைக் கல்வியை மையப்படுத்திய மாறுதல்கள்



பேராசிரியர் மா.சின்னத்தம்பி
(கல்வியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அறிமுகம்

இலங்கையின் கல்வி என்பது 1930களில் இருந்தே அரசின் கல்வி ஏற்பாடாக வளர்ந்து வருவதாகும். பரீட்சைகளையும், அறிவைச் சான்றிதழ்ப்படுத்துவதையும் மையப்படுத்தி பாடசாலைக்கல்வி வளர்ந்து வந்துள்ளது.

கற்கும்மொழி, கற்கைகள், பாட உள்ளடக்கங்கள், கற்பித்தல் முறைகள், மாணவர் நலவசதிகள், ஆசியர்கல்வி, மதிப்பீடுகள், கல்வியின் தரம் போன்றன இலங்கையின் பாடசாலைக்கல்வி சார்ந்த கொள்கைகளில் அடிப்படையாகவுள்ளது.

சாதாரண மக்களில் இருந்து விலகி அந்நியப்பட்டும், உடை கசங்காத உயர் குழாமுக்குரிய தொழில்களில் மையம் கொண்டும் வளர்வதற்கு ஏற்றதாகவே பாடசாலைக் கல்விக் கொள்கைகள் உருவாகின.

உதவி வழங்கும் உலக நிறுவனங்களின் அபிலாசைகள் தான் கல்விக் கொள்கைகளாகத் மறுபிறவி எடுத்து உலாவிவருகின்றன. ஏழைகளுக்கு எளிய கல்வியும் உயர் குழுமத்தினருக்கு வலிமையான கல்வியும் கிடைப்பதற்கு கல்விக் கொள்கைகள் உதவிவருகின்றன.

இப்பின்னணியில் இலங்கையின் கல்வி ஏற்பாடுகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வி தொடர்பான கொள்கை, போக்குகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## கல்வியைக் கற்பதன் அடிப்படைகள்

நாடுகளின் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் கல்வி வழங்குதல் என்பது எல்லா நாடுகளின் அரசாங்கங்களினதும் முன்னுரிமை மிக்க கடமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் வாழ்வதற்குத் தேவைப்படுகின்ற ஆற்றல்களையும், மனோபாவங்களையும், உத்தமமான சமூக விழுமியங்களும் தன்னம்பிக்கையும் எல்லா மக்களிடமும் தொடர்ந்து விருத்தி செய்யும் ஆற்றல் கல்விச் செயல்முறைகளில் உள்ளது.

கல்வி முறைமையும் அதன் குறிக்கோள்களும், செயல்முறைகளும், கல்வி நிறுவனங்களினதும் ஒன்றினைந்த வகையில் ஆற்றதும் நல்லிணக்கமும் கொண்ட குடி மக்களை தயார் செய்து வருகின்றது.

குடிமக்கள் பண்புகளையும் சனநாயக மரபுகளை மதிக்கும் அவர்களது பண்பு நலன்களையும் கல்வி வழங்க வேண்டும்.

தனிநபரதும் அவர்ள் ஒன்றிணைந்த சமூகங்களினதும் கலாசாரா, சமூக அரசியல், பொருளாதார அடிப்படையிலான பங்களிப்பை மிகவும் சிறப்பாக வழங்கும் பேராற்றலைக் கல்வி வழங்க வேண்டும்.

தனிநபர்களின் உடல், உளம், மெய்ப்பாடு, ஒழுக்கம் என்பவற்றை ஒன்றிணைந்த வகையில் வளர்க்கும் முறைமை சார்ந்த செயல்முறையாக கல்வி விளங்குகிறது.

இத்தகைய உள்ளடங்கிய பல்வகைப்பட்ட குறிக்கோள்களை உள்வாங்கி கல்விக் கொள்கைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் கல்வி முறைமையும் கொள்கைகளும்

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே கல்வி தொடர்பாக குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இலங்கையின் கல்வி முறைமையில் இக்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பெரிதும் தொகை ரீதியில் ஏற்பட்ட விரிவாக்கங்களாக விளங்கின.

சுதந்திர இலங்கையின் கல்விக் கொள்கைகளின் உருவாக்கம் என்பது பல்வேறு காரணிகளின் செல்வாக்குக்கு உட்பட்டதாகவே காணப்பட்டது. இலங்கையின் அரசியல், சமூக பொருளாதார தத்துவங்களின் அடிப்படையில் கல்வி நோக்கப்பட்டதுடன், அதன் அடிப்படையிலேயே முன்னுரிமைகளும் தீர்மானிக்கப்பட்டன.

பல்வேறு நாடுகளின் கல்விக்கொள்கைகள் அரசாங்கத்தின் ஆவணங்களில் குறிப்பிடப்படுவதுண்டு. இத்தகைய கொள்கைப் பிரகடனங்கள் கல்வி பற்றிய வெள்ளை அறிக்கையாக வெளிவருகின்றன. இலங்கையில் சனாதிபதி, பிரதமர், கல்வியமைச்சர் ஆகியோரில் யாரேனும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் பருவப் பத்திரங்களாக அல்லது ஆணைக்குழுக்களின் அறிக்கைகளாக இத்தகைய கல்விக் கொள்கைகள் பிரகடனப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் கல்வி முறைமை என்பது பின்வரும் உப பகுதிகளைக் கொண்டுள்ளது.

01. முன்பள்ளிக்கல்வி
02. ஆரம்பக்கல்வி
03. இடைநிலைக் கல்வி
04. தொழில் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி
05. மூன்றாம் நிலைக்கல்வி
06. முறைசாராத கல்வி

இவை தொடர்பான கொள்கைகள் முக்கியமானவை எல்லாப் பிள்ளைகளும் இத்தகைய எல்லாக் கல்வி அடுக்கமைவிலும் கற்பதில்லை. ஆரம்பக்கல்வி அல்லது அடிப்படைக் கல்வி என்பதில் பெரும்பாலனவர்கள் கற்பதுண்டு. எழுத்தறிவு. விழிப்புணர்வு என்பவற்றை முன்னேற்றுவதில் ஆரம்பக்கல்வி பெரும்பங்கு வகிக்கிறது.

நகரங்களிலும், வளர்ச்சிபெற்ற கிராமங்களிலும் உள்ள நடுத்தர வர்க்கத்தினரின் குடும்பங்களில் இரட்டை உழைப்பாளர்கள் உள்ள நிலைமைகளில்தான் முன்பள்ளிக் கல்வி தனியார் துறையில் வளர்ச்சி பெற்றுள்ளது. முன்பள்ளிக்கல்வியை முழுமையாக பொறுப்பேற்பதற்கு அரசாங்கம் இன்னும் தயாராகிவிடவில்லை.

இடைநிலைக்கல்வி தரம் 6-13 வரை இலங்கையில் வழங்கப்படுகின்றது. பெரிதும் அரச நிதியுதவியில் தங்கியுள்ள பாடசாலைகளில்தான் பெரும்பாலான பிள்ளைகள் இடைநிலைக்கல்வியைப் பெறுகின்றனர்.

தரம் 11லும் தரம் 13இலும் தேசிய ரீதியிலான தடைதாண்டலாக தேசிய பரீட்சைகள் அரசினால் நடத்தப்படுகின்றன. நல்ல தொழில்களுக்கும் உயர்பட்டப்படிப்புகளுக்கும் வழிவிடுவதாக இத்தகைய தேசிய தடைதாண்டல் பரீட்சைகள் இருப்பதால் இடைநிலைக் கல்வி அடுக்கு இலங்கையில் அதிக முக்கியத்துவம் கொண்டதாகவும் அதிக சவால்கள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது.

ஒழுங்காகவும்,முறைமையாகவும் இடைநிலைக்கல்வி என்பதை தொடர முடியாத நிலைமைகளில் மாணவர்களுக்கான மாற்றுவழியாக விளங்குவதே தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வியாகும். பாடசாலையில் இருந்து இடைவிலகுவோருக்கான ஏற்பாடாகவும், திறன்சார் ஆற்றலினால் வளர்வதற்கு உதவும் கல்வியாகவும் இக்கல்வி அமைகின்றது. இலங்கையில் 2008ஆம் ஆண்டுவரை இத்தகைய திறன்விருத்தியை மையமாகக் கொண்ட தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கு பட்டப்படிப்புக்கு சமனான அங்கீகாரம் வழங்கப்படவேயில்லை. தற்போதுதான் தேசிய தொழில்சார் தகமை (National vocafornal Qualification-NVQ) என்பது அங்கீகரிக்கப்பட்டு பட்டத்துக்கு சமனான உரிமையும்

வழங்கப்பட்டுள்ளது. இது அண்மைக்காலத்தில் இலங்கையின் கல்விக்கொள்கையில் ஏற்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். தொழில் மனப்பாங்கு, தொழில் தேர்ச்சி, தொழில் திறன், தொழில் ஒழுக்கம் போன்ற பலவற்றையும் கல்வியாக அங்கீகரிக்கும் இந்த மாற்றம் மிகவும் முன்னேற்றகரமானதாகும்.

மூன்றாம் நிலைக்கல்வி என்பது அதிர்ஷ்டசாலிகளாக சமூக முந்துரிமை பெற்றவர்களால் மேற்கொள்வதாகவே அமைந்துள்ளது. பல்கலைக்கழகக் கல்வி, தொழில் வாண்மைக்கல்வி, ஆசிரியர்கல்வி,உயர் தொழில்நுட்பக் கல்லூரி போன்ற பலவகைக்கல்வியும் இதில் அடங்கும். நாட்டின் அதி உண்ணத பொறுப்புக்களை ஏற்பவர்களையும் தேசிய முடிவுகளை மேற்கொள்ளும் மதிநுட்பவியலாளர்களையும், விஞ்ஞானிகளையும் சர்வதேச நிபுணர்களையும் உருவாக்குவதில் இத்தகைய மூன்றாம் நிலைக்கல்வி மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. கொள்கை வகுப்பாளர்களின் அகவயமான உணர்வுகளும் அவர்களது வர்க்கம் சார்ந்த கண்ணோட்டங்களும் மூன்றாம் நிலைக் கல்விக் கொள்கைகளை வடிவமைப்பதில் அதிகசெல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. பட்டதாரிகளின் வேலையின்மை, உயர்கல்விக்கான அரசின் செலவின அதிகரிப்பு, பட்டதாரிகளின் புலம்பெயர்தல் போன்ற நெருக்கடிகளின் துயரங்களின் பாதிப்புகள் கொள்கை உருவாக்கத்தில் வெளிப்படுகின்றன.

பல்கலைக்கழக கல்வியைத் தனியார் மயப்படுத்துவது பற்றிய கொள்கைகள் அறிவாற்றலை விடவும் பொருளாதார வலிமை உடையவர்கள் வசதிமிக்க சூழலில் தரமான முறையியலில் உலகஅங்கீகாரம் பெற்ற பட்டங்களைப் பெறுவதற்கு இடமளிப்பதாக உள்ளது. உயர்கல்வியை இலவசமாக வழங்குவதில் இருந்து அரசாங்கம் படிப்படியாக பின்வாங்குவதற்கு வேறு துறைகளுக்கு அதிக முதலீடு தேவைப்படுவது பற்றிய காரணங்கலும் பரிசீலிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு, உட்கட்டமைப்பு வரிவாக்கம், வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையின் விரிவு என்பன இதில் அதிக தாக்கத்தை உருவாக்கின. திறந்த பல்கலைக்கழக முறையை விரிவு படுத்துவதும் இணைய வழியிலான உயர்கல்வி ஏற்பாடுகளை முன்னேற்றுதலும் தொடர்பான கொள்கை உடன்பாடுகளை அரசாங்கங்களின் பொருளாதார நெருக்கடிகள் பற்றிய எச்சரிக்கையுணர்வுடன் தொடர்புடையன.

பாடசாலை முறைமைகளில் முழுமையாக கற்க முடியாமல் போனவர்கள் பாடசாலைகளை விட்டு விலகிய பின்பும் தகுதி மிக்க வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு தேவையான கல்வி மற்றும் பயிற்சியை வழங்குதல் முறைசாரா கல்வியாக ஏற்பாடு செய்யப்பட்டது. பாடசாலையின் பௌதீக வளங்களின் பயன்பாட்டில் உள்ள குறைநிலைகயை இயன்றளவு குறைத்துக் கொள்ளும் வகையில் இந்த ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்தன.

இத்தகைய பல்வேறு உப பகுதிகள் பற்றிய கல்வி ஏற்பாடுகள் அரசாங்கங்களின் கல்விக் கொள்கைகளில் நிகழ்ந்த மாற்றங்களினால் தீர்மாணிக்கப்பட்டு வந்தன.

1970களின் பின் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன என்பது மனங்கொள்ளத்தக்கது. பெரும்பாலான இலங்கை மக்களின் கல்வி தொடர்பான கொள்கை ஆக்கம் என்பது பாடசாலைக் கல்வியுடன் பிணைக்கப்பட்டதாயிருக்கிறது.

## பொதுக் கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகள்

இலங்கையின் கல்வி முறைமை என்பது தற்போது மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றுக்கென பொறுப்பு மிக்க அதிஉயர் மேலாண்மை நிறுவனங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அவை

01. பாடசாலைக்கல்வி அல்லது பொதுக்கல்வி.

இது கல்வி அமைச்சின் கீழ் உள்ளது. இதன் அதிஉயர் மேலாண்மை நிறுவனம் தேசிய கல்வி நிறுவகம் (National Insititute of Education –NIE) ஆகும்.

02. உயர்கல்வி அல்லது பல்கலைக்கழக கல்வி.

இது உயர்கல்வி அமைச்சின்கீழ் செயற்படுகின்றது. இதன் அதிஉயர் மேலாண்மை நிறுவனம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு (University Grants Commition -UGC) ஆகும்.

03. தொழில்நுட்பம் மற்றும் தொழில்கல்வியும் பயிற்சியும் உள்ளடங்கிய தொழல்நுட்பக் கல்வித்துறை

இது திறன்கள் விருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் உள்ளது. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு (Tertiary and Vocational Education Commission -TVEC) இதன் அதிஉயர் மேலாண்மை நிறுவனம் ஆகும். இதுவே கொள்கை ரீதியில் அரசாங்கத்தினால் மிகவும் காலந்தாழ்ந்து அங்கீகரிக்கப்பட்ட கல்வித்துறையாகும். 2008ஆம் ஆண்டுவரை இது முன்னுரிமையுள்ள துறையாக கொள்கை வகுப்போரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இவற்றில் பாடசாலைக்கல்வி தொடர்பான கொள்கை ஆக்கங்களை மிகவும் முக்கியத்துவம் உடையனவாக தொடர்ந்தும் கருதப்படுகின்றது. இந்த பொதுக் கல்வித்துறையின் முக்கியமன இயல்புகள் பின்வருவன (2012).

| | |
|---|---|
| மொத்தப் பாடசாலைகள் - | 10,763 |
| அரசாங்க பாடசாலைகள் - | 9931 |
| தனியார் பாடசாலைகள் | 98 |
| பிரிவேனா (பௌத்த பாடசாலைகள்) | 734 |
| மாணவர் தொகை (மில்லியன்) | 4.18 |
| ஆசிரியர்கள் (000) | 244 |
| ஆசிரிய மாணவ விகிதம் | 1:18 |
| கல்விக்கான அரசின் செலவீனம் - பில்லியன் | 136.2 |

இலங்கையில் சராசரியாக ஒவ்வொரு ஆறு கிலோமீற்றருக்கும் ஒரு பாடசாலையைக் காணமுடியும். இது முன்மாதிரியான பாடசாலை பரம்பல் அல்லது வலையமைப்பு ஆகும்.

யுத்தம், மண்சரிவு, உள்ளூர் குடிப்பெயர்வு, மாணவர் தொகை வீழ்ச்சி போன்ற காரணங்களால் பாடசாலைகள் மூடப்படுவதும், புணரமைக்கப்பட்டு மீள திறக்கப்படுவதும் இயல்பான நிகழ்வாக உள்ளது.

பொதுக்கல்வியை முன்னேற்றும் விசேட திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட 139 பாடசாலைகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. 348 பாடசாலைகள் வடமாகாணத்தில் மீண்டும் திறக்கப்பட்டன.

பொதுக்கல்வியை வழங்கும் பாடசாலை முறைமை தொடர்பான கொள்கை ஆக்கங்களில் பின்வருவன முக்கியமனதாக இருந்தன.

1. ஆரம்பக்கல்வி நிலையில் இயல்பான சூழலில், இதமான சமய சூழலில் சமயம் கற்பித்தல்
2. தனிப்பட்ட பிள்ளைகளின் ஆளுமை விருத்தி
3. கிராம-நகர ஏற்றத்தாழ்வைக் குறைத்தல். இதன் கீழ் தற்போது 1000 பாடசாலைத் திட்டமும், 5000 (சிறிய) பாடசாலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
4. இயல்பான நடைமுறை அறிவை சூழல் மற்றும் உற்பத்தி சார்ந்து உருவாக்குதல்.
5. உடல், உள பாதிப்புக்குட்பட்ட குழந்தைகளை சரிசமமாக வைத்துக் கற்பித்தல்.
6. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறன்களை பரவலாக வளர்த்தல்.
7. தகுதிமிக்க வேலைகளைப் பெறுதற்கேற்ற தொழில்சார் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல்.
8. ஆங்கிலக்கல்வியை மட்டுமன்றி மும்மொழிக் கல்வித் திட்டத்தை (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) நடைமுறைப்படுத்தல்.

9. தொழில்நுட்பக்கல்வியை முன்னுரிமை மிக்கதாக வளர்த்தலும், கலைத்துறையில் மிகுதியாக மாணவர் நுழைவதைக் குறைத்தலும்

இத்தகைய கொள்கை முன்னேற்றங்கள் மூன்று அடிப்படைகளைக் கொண்டுள்ளது.

- ➢ கிராம-நரக ஏற்றத்தாழ்வைக் குறைப்பதன் மூலமாக கல்வியை சனநாயகப் படுத்தலும் சரிநிகர் மற்றும் சமத்துவத்தை மேம்படுத்தலும்.
- ➢ இலவசக்கல்வி 1944 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும் மாணவர் தொகையை அதிகரித்தல், பாடசாலைகளை அதிகரித்தல், கல்விக்கான செலவீனங்களை அதிகரித்தல் போன்ற தொகை ரீதியான விரிவாக்கமே பெரிதும் நிகழ்ந்தன.

  தற்போது கற்றல், கற்பித்தலில் தரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் தரமான வெளியீடுகளை உயர்த்துதல் போன்றன வலியுறுத்தப்படுகின்றது.
- ➢ உலகலாவிய கல்வித்தர நிலைகளுடன் ஒப்பிட்டு பிரதான பாடங்களிலான கற்றல் தரத்தை உயர்த்துதலுடன் உலக தொழில்வாய்ப்புக்களை கையகப்படுத்தக்கூடிய திறன்மிக்கவர்களை அதிகரித்தல்.

**உலக மயமாக்கலுடனும் அறிவுப் பொருளாதார வளர்ச்சியுடனும் பாடசாலை செயல்முறைகளை இணைத்தல்.**

இலங்கையில் பாடசாலைக் கல்வி தொடர்பான கொள்கை மாற்றங்கள், கல்வி சீர்திருத்த அறிக்கைகளாகவும் சட்டங்களாகவும் பெரிதும் வெளிப்படுத்தப்பட்டன. இதன்படி பின்வரும் சீர்திருத்தங்கள் முக்கியத்துவமுடையன.

01. கல்வி பற்றிய 1939 ஆம் ஆண்டு கட்டளைச்சட்டம்.
02. 1960ஆம் ஆண்டு உதவி பெறும் பாடசாலைகள் தொடர்பான சட்டம்
03. 1950ஆம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை
04. 1964ஆம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை
05. 1966ஆம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை
06. 1972ஆம் ஆண்டு கல்வி சீர்திருத்தங்கள்.
07. 1981ஆம் ஆண்டு கல்வி சீர்திருத்தங்கள்.
08. 1991ஆம் ஆண்டு கல்வி சீர்திருத்தங்கள்
09. 2009ஆம் அண்டு பொதுக்கல்வி பற்றிய புதிய சட்டம் பற்றிய முன்மொழிவு
10. 2006ஆம் ஆண்டு மஹிந்த சிந்தனை ஆவணம்
11. 2013ஆம் ஆண்டு தொழில்நுட்பக்கல்வி பற்றிய முன்மொழிவுகள்.

இத்தகைய படிமுறை முன்னேற்றங்கள் இலங்கையின் உயர்கல்விக் கொள்கை மாறுதல்களுக்கும், தொழில் மற்றும் தொழில்நுட்பக்கல்வி மாறுதல்களுக்கும் வழிகாட்டியாக அமைந்திருந்தன.

தற்போதைய தோற்றப்பாட்டின் அடிப்படையில் பாடசாலைக்கல்வியில் நிகழ்ந்து வரும் மாற்றங்களில் புதிய கொள்கை மாறுதல்கள் தென்படுகின்றன. அவை

1. தனியார் மற்றும் சர்வதேசப் பாடசாலைகள் ஊக்குவிக்கப்படுதல்
2. கணினி மற்றும் தகவல் தொடர்பாடலில் உன்னத வளர்ச்சியை உருவாக்கல்
3. அறிவு சார் கல்வியில் இருந்து திறன்மைய கல்விக்கு நகர்தல்
4. பரீட்சை அமைவுகளைவிடவும் தொழில் உலகின் தேவைகளை கவனத்தில் (அதிகமாக) கொள்ளுதல்
5. உலக தொழில்வாய்ப்பு உலக உயர்கல்வி என்பவற்றுக்குரிய தகைமைகளை வளர்த்தல்.
6. பல அமைச்சர்கள் ஒன்றிணைந்து பாடசாலை மட்ட தேசிய மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

7. பாடசாலைகளின் கல்வி ஏற்பாடுகளை தொழில்நுட்பக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ஆசிரிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுடன் பொருத்தமான ஒண்றிணைதல்.

இந்தப் புதிய போக்குகள் மீண்டும் பாடசாலைக் கல்வியில் புதிய மாதிரி இரட்டைத் தன்மையை உருவாக்கியுள்ளது. அது:

1. உலக தரத்தில் ஆங்கில மொழியில் உலக மட்டத்தில் தரமான புதிய கல்வியில் செல்வந்தர்கள் கற்றல், இது அறிவு மேலாண்மையை தன்மையைக் காட்டுவதால் அமையும்.
2. உள்ளூர் மட்டத்தில் சுதேசிய மொழிகளில் வேலை மற்றும் திறன்மைய கல்வியில் வறியவர்கள் கற்றல், இது தொழில் வழங்குநருரின் முன்னுரிமைகளை மதிப்பதா அமையும்.

இது சமமின்மை தொடர்வதையே தெளிவுபடுத்துகின்றது.

## நிறைவுரை

இலங்கையில் பாடசாலைகளின் பரம்பலும் அரசின் கல்வி ஊக்குவிப்புகளும் சிறப்பாகவே இருந்துள்ளன. ஆனால் இலவசமான உயர்கல்விக்குரிய வாயில்களைத் திறந்து விடும் ஆற்றல் பாடசாலைக் கல்விக்கு இருப்பதால் உயர்கல்வியில் அரசியல் மேலாதிக்கமும் நீதியிலிருந்து நழுவிச்செல்லும் கொள்கைப் போக்கும் உருவாயிற்று.

பலமான உயர்கல்விக் கற்கைகளான மருத்துவம், பொறியியல், சட்டம், முகாமைத்துவம் போன்றவற்றுக்கு எந்த சமூக, இன, மொழிப்பிரிவினரை அதிகம் அனுமதிப்பது என்ற அணுகுமுறை பாடசாலைக் கல்வியை அரசியல் மயப்படுத்தி அமைதியின்மை மூன்று தசாப்தங்கள் பரவிவிட காரணமாக அமைந்துவிட்டது.

புதிய உலகமயமாதல், அறிவுப் பொருளாதாரம், மின்னியல் நுட்ப வளர்ச்சி, கல்வி வியாபாரமாக மாற்றம் பெற்றமை என்பன கல்வியை நவீனமயப்படுத்தியுள்ளன.

எனினும் இப் புதிய மாறுதல்கள் மீண்டும் வறியவர்களுக்கு உயர் குழுமத்தினருக்குமான வேறுபட்ட கல்வி ஏற்பாடுகளையே வளர்த்துள்ளன. புதிய இரட்டைப்பண்பு அதிக பலத்துடன் வளர்கின்றது.

பாடசாலைக்கல்வியில் இருந்து அரசாங்கம் மெல்ல மெல்ல விலகி தனியார் துறைக்கு குறிப்பாக உலகின் முன்னணி தனியார் கல்வி சார் வியாபார நிறுவனங்களுக்குரிய தொழிற்படு பரப்பினை அதிகரித்து வருவதே புதிய தோற்றப்பாடாகின்றது.

**கட்டுரையாளர் பற்றி:**

- யாழ். இந்ததுக் கல்லூரியில் கல்விகற்று 1968இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளியில் சிறப்புப் பட்டம் பெற்றவர்.
- 1968இன் இந்து இளைஞன் சஞ்சிகையின் (தமிழ்) பத்திராதிபராக செயற்பட்டவர்.
- 1990களில் ஒருவருடம் யாழ். இந்துவில் பொருளியல் ஆசிரியராக இருந்தவர்.
- தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் மூத்த கல்வியியல் பேராசிரியராக பணியாற்றுபவர்.
- கல்வியிலும், பொருளியலிலும் 30 நூல்களையும் 200 மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டவர்.
- 2011ஆம் ஆண்டு கனடாவின் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் வருகை தரும் பேராசியராக (Visiting Scholar) பணியாற்றியவர்.

❒❒❒

# பள்ளிக்கூடத்தின் மீது காதல் பாடைவரைக்கும்..!

க. பிரேம்சங்கர் (1986)



"பள்ளிக்கூடக் காதல் படலைவரைக்கும் என்பார்கள்" எனக்கு பாடை வரைக்கும் போலிருக்கிறது என்றார் ஒரு காதல் கவிஞன். இது போன்று எமக்கு பள்ளிக்கூடத்தின் மீது உள்ள காதல் சாகும் வரைக்கும் போலுள்ளது. ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு இந்துவில் யான் இணையும்போது கனவுகளோ ஆயிரம், பஸ்ஸில் பிரயானம் செய்யும் அனுபவத்தில் இருந்து வகுப்பறையில் பாதணிகளைத் தொலைத்ததுவரை மனதில் என்றும் மறக்க முடியாத அனுபவங்கள். .....,

குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பமாகிய ஆறாம் வகுப்பு ஆரம்பத்தில் கசகசப்பாக இருந்தாலும் ஓரிரு மாதங்களில் பரீட்சயமாகியது. முன்னாள் இராணுவ அதிகாரியும் ஆங்கில ஆசிரியருமாகிய சந்தியாப்பிள்ளையின் அடிதடியில் அகப்பட்டதும் ஒரு வகையான அதிர்ச்சி அனுபவம் தான். ஒரே பெரிய மண்டபத்தில் மூன்று,நான்கு வகுப்புகள் நடைபெறும்போது ஆங்காங்கே ஆசிரியர்களின் கைவரிசைகள் கூட அவமாணமாக இருக்கும்.

சங்கீத ஆசிரியையின் சாய்ந்த நடையை ஆசிரியர் சந்தியாப்பிள்ளை பரிகசிக்க அதிலே கிடைத்த நகைச்சுவையை விட அதில் கடத்திய ஐந்து பத்து நிமிடங்கள் என்றும் மறக்கமுடியாது. வருடாவருடம் அரசாங்கத்தினால் அளிக்கப்படும் இலவசப் பூச்சி மருந்து எமக்கு வெறி போன்ற ஓர் உணர்வைத் தர, அதைத் தவறாக புரிந்து கொண்ட வி.எஸ்.சுப்பிரமணியம் ஆசிரியர் நாங்கள் நடிக்கின்றோம் என்று நினைத்து அடிதடி செய்ததும் ஒரு வகை வாழ்க்கை தான்.

குமாரசாமி மண்டபத்தின் மதிலால் கையை நீட்டி கிழவியிடம் சில மாங்காய் துண்டுகளை வாங்கியுண்ட வாழ்க்கை இனிமேல் எப்போது வரும்! ஐஸ்கிறீம் மீது அவா கொண்டு இடித்து நெரித்துக் கொண்டு வாங்கி சகபாடியின் முதுகில் வழுக்கி விழ அவன் கோபம் கொண்டு தனது ஐஸ்கிறீமால் திருப்பித் தாக்க நான் இனிப்புச் சுவையை இழந்ததை யார் அறிவார்.

வயது முதிர நட்புகள் வளர ஒருவித ஆர்வம் பாடசாலையில்! பாடசாலைப் பகிஷ்கரிப்பில் கூட யாம் கூடியிருந்து வகுப்புகளில் கதைத்துக் கதைத்துக் காலம் தள்ளினோம் எனலாம். மைதானத்தில் அடிக்கடி பயிற்சியும் உதைபந்தாட்டப் போட்டிக்காக வேறு பாடசாலைக்குச் செல்லும்போது கைதட்டிப் பாடிய அந்த நாட்கள் இன்றும் கே.கே.எஸ் ரோட்டை நினைவுபடுத்தும்.

1979இல் இருந்து எம்மோடு இருந்துவந்த ஆசிரியர்களான திரு.முத்துக்குமாரசாமி, திரு.சந்தியாப்பிள்ளை, திரு.வேலாயுதபிள்ளை, பண்டிதர் கந்தசாமி, பண்டிதர் தம்பையா, வி.எஸ்.சுப்பிரமணியம், திரு.எம்.பெருமான், விளையாட்டுக்கு துரைசிங்கம் ஆசிரியர் போன்றோர் மறக்க முடியாத முகங்கள். சோமசுந்தரம் ஆசிரியர் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாக இருந்தபோது ஏற்பட்ட மாற்றங்களை நினைவு கூறலாம்.

இலங்கையில் இனப்பிரச்சினை மூன்றாவது கட்டமாக உருவெடுக்க அதில் அகப்பட்ட பதின்ம வயதுப் பாவிகள் நாங்கள் தான். ஆசிரியர் மரியதாஸ் பொலிஸ்படை குழுவில் கடைசியாக பாசறைக்கு சென்றவர்களும் நாங்கள் தான்.


நடாவின் தேனீர்ச்சாலையில் நெரிபட்டு போண்டாவும் வடையும் வாங்கி அதில் பாதியை நண்பனுக்கு பகிர்ந்து கொடுத்து உண்பதில் இருந்த சுகம் இப்போது ஒரு படையலையே உண்டாலும் தாங்குமோ எனத் தோன்றும்.

வசதிகள் குறைந்த ஒரு பாடசாலையில் எல்லாத் துறைகளிலும் செழித்து கல்வி கற்றல் என்பது ஒருவிதப் போராட்டம் தான். அதில் நாங்கள் வெற்றியடைந்து விட்டோமானால் அதுவும் வாழ்க்கையில் ஒரு மிகப் பெரிய நினைவுச் சின்னம் தான். இந்த உலகில் கல்வி கற்ற பாடசாலையைப் பாடாத புலவர்களோ கவிஞர்களோ இல்லையெனலாம். ஏட்டில் எழுதிப்படித்த புலவர் காலமாக இருந்தாலும் இன்று கணினியில் பதித்து வாழ்ந்த காலமாக இருந்தாலும் அந்த அனுபவம் முக்கியமானதுதான். அவை அனைத்தையும் யாம் கடந்து இன்னொரு உலகத்தில் வந்துவிட்டோம் என்னும்போது மிகவும் அவஸ்தையாகத் தான் உள்ளது.

இருந்தும் எமது போர்க்கால அனுபவங்களும் அத்தோடு அமையப்பெறுவதால் அந்த வாழ்க்கையின் முக்கியத்துவம் இன்னும் செழிப்பாகின்றது. இன்றும் என் மனதில் நீங்கா இடம்பிடித்து இருக்கின்றது. அந்த நீல வெள்ளைக் கொடியுடைய இந்துவின் ஒரு மகன் என்பதில் மிகவும் சந்தோசமாக உள்ளது. அந்த நினைவுகளோடு இப்படிச் சில பேனாக் கிறுக்கல்கள் உங்களுக்குப் பழைய நினைவுகளைக் கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை. அறிவு ஆண்மிகம். விளையாட்டு, நல்ல நட்பு, இவையனைத்தையும் தந்த எமது பாடசாலையை யாம் என்றும் போற்றிப் புகழுவோமாகா, யாம் பெற்ற அந்த இன்பம் இவ்வையகமும் பெற எமது வாழ்த்துக்கள்...

"வாழிய யாழ். நகர் இந்துக்கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்"

❒❒❒



# 125 ஆம் ஆண்டை நோக்கி யாழ். இந்து



**ப. விவேகானந்தா** MBA Finance Spe.

**நூ**று ஆண்டுகளைக் கடந்தும் பெரும் ஆலமரமாக ஓங்கி அதன் புகழ் பன் மடங்கு உயர்ந்து இன்று சர்வதேச மட்டத்தில் உயர்ந்து சகல வசதிகளையும் தன்னகத்தே உள்ளடக்கி மாணவர்களின் வளர்ச்சிக்கு பெரும் பக்க பலமாக இந்து தொண்டாற்றி வருகிறது. இத்தகைய அபரிதமான வளர்ச்சி கல்விப் பணியில் தங்களின் வியர்வையையும் உழைப்பையும் கொடுத்த அதிபர்கள், ஆசிரிய ஆசிரியைகள், பழைய மாணவர்கள், பழைய மாணவ சங்கங்கள், பெற்றோர்கள், மற்றும் கல்வி சார் பெரியோர்கள், இவர்களின் ஊக்கமும் வழிநடத்தலும் ஆறுமுக நாவலர் கண்ட கனவை இந்துக் கல்லூரியாக கலை, கலாசார விழுமியங்களுடன் காலம் காலமாக மாறிவருகிற சூழலுக்கும், விஞ்ஞான வளர்ச்சிக்கும் ஈடுகொடுத்து எமது பாரம்பரியத்தை தொடர்ந்து வரும் இளம் சமுதாயத்துக்கு எடுத்துச் செல்லும் பணி அளப்பரியது. இவ்வாறான ஒரு பாரிய விழுமியங்களைச் சுமந்து செல்லும் எமது பாடசாலையை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வரையறை செய்யமுடியாது. ஆனாலும் எனது அறிவுக்கு எட்டியவரை ஒரு மீள்பார்வையும், எதிர்நோக்கும் சவாலையும், எட்ட வேண்டிய இலக்கையும் இந்தக் கட்டுரையில் வரைய எண்ணியுள்ளேன்.

## பாடசாலையும் தமிழர் வாழ்வும்

நான் மேற்கூறியவாறு யாழ். இந்துவில் சைவசமயமும், தழிழும் கலாச்சாரமும் மாணவர்களுக்கு முக்கிய பாடமாக அனுபவ ரீதியாக உணரும் வண்ணம், சைவ முன்னேற்றச் சங்கம், தமிழ் மன்றம் ஆகியவற்றை நிறுவி பேச்சுப்போட்டி, தேவாரபாராயணப்போட்டி, விழாக்கள் (நவராத்திரி, பொங்கல்) மூலம் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு ஆர்வத்தையும், ஊக்கத்தையும் கொடுத்து, சமுதாயத்தில் ஒா் நற்பிரசையாக உருவெடுக்க களம் அமைத்து ஊக்கப்படுத்துகிறார்கள். இதில் மாணவர்களை விவேகாணந்தா சபை நடத்தும் போட்டிகளிலும் கல்வித் திணைக்களம் நடத்தும் போட்டிகளிலும் பங்குபெற வைத்து அவர்களை ஊக்கப்படுத்துகிறார்கள்.

மற்றும் வருடந்தோறும் சிவராத்திரி விரதத்துக்கு மன்னார் திருக்கேதிஸ்வர மாணவர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கு சிவராத்திரி மகத்துவத்தை நேரடியாகவே உணரவைக்கிறார்கள். இப்படியான ஒரு சூழலில் காலம் சென்ற அதிபர் திரு P.S.குமாரசாமி அவர்களின் தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்களால் பாடசாலை வளாகத்திலே அழகிய ஆலயம் அமைய வேண்டும் என்று எண்ணி காக்கும் கடவுள் ஞான வைரவருக்கு கோயில் கட்ட எண்ணி மாணவர்கள் அயராத முயற்சியாலும் பெற்றோர்களின் பங்களிப்பாலும் பல ஆண்டுகள் ஒரு சிறிய ஆலயமாக கட்டி 10-04-1989ல் அதிபர் பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் பெரும் குடமுழுக்கு கண்டு ஞான வைரவர் எழுந்தருளி எமக்கு அருள் பாலித்துக் கொண்டுள்ளார். இன்று அதிபர் வீ.கணேசராசா தலைமையில் மேலும் மெருகூட்டப்பட்டு பெரிய மண்டபத்துடன் அழகிய சிற்ப வேலைப்பாட்டுடன் பெரும் ஆலையமாக உருவமெடுத்து மூன்றாவது குடமுழுக்கையும் கண்டுள்ளது. ஆலய வளர்ச்சி கல்லூரியின் வளர்ச்சியாகவும், கலையின் வளர்ச்சியாகவும் கணித்துக் கொள்ளலாம். இவ்வாறு பாடசாலை மாணவர்களுக்கு எமது பாரம்பரிய விழுமியத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கிறது.

## பாடசாலை அபிவிருத்தி

பாடசாலை அபிவிருத்தி என்னும்போது பாடசாலைக் கட்டடங்களும் பாடசாலை கல்வி மேம்பாட்டு விருத்தியும் உள்ளடங்குகிறது. பாடசாலை காலம்காலமாக அரசாங்க நிதி உதவியை நம்பி இருக்கிறது. மற்றும் பாடசாலைகளில் கல்வி பயின்ற பழைய மாணவர்கள் யாழ். அரசாங்க அதிபர்களாக இருந்து பல சேவைகளை புரிந்துள்ளனர். அந்த வரிசையில் மறைந்த அரசாங்க அதிபர் திரு.பஞ்சலிங்கம் அவர்களின் காலத்தில் மறைந்த அதிபர் P.S.குமாரசாமியின் காலத்தில் மறைந்த ஜனாதிபதி J.R ஜெயவர்த்தனாவின் ஜனாதிபதி நிதியில் இருந்து குமாரசாமி மண்டபத்துக்கு அருகாமையில் இரண்டு தொடர்மாடி கட்டடங்கள், விஞ்ஞான பௌதீக ஆய்வுகூடங்கள் கட்டப்பட்டு, பின்னர் வகுப்புகளாக பாவிக்கப்படுகிறது. மேலும் திரு.எஸ்.பொன்னம்பலம் அவர்களின் காலத்தில் மேலும் பல மாடிக் கட்டடங்கள் நூல் நிலையத்துக்கு அருகில் தற்போது வீ.கணேசராசா அவர்களின் காலத்தில் வடக்கின் வசந்தம் என்ற அபிவிருத்தி திட்டத்தில் முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரும், தற்போது ஆளுநர் அவர்களின் செயலாளர் திரு . இளங்கோவன் அவர்களின் முயற்சியில் பல இலட்சங்கள் ஒதுக்கப்பட்டு புதிய பாடசாலை செயலகமும், வகுப்புகளும் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் முடியும் தறுவாயில் உள்ளது. மேலும் இவ்வருடம் யாழ். இந்துக்கல்லூரியில் தொழில்நுட்பக் கல்லூரிப் படிப்புக்கு (BTEC) பல மில்லியன்கள் ஒதுக்கப்பட்டு மேலும் இரண்டு மாடிக் கட்டடம் கட்டுவதற்கு அத்திவாரம் இடப்பட்டு வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றது. மேலும் பல மாடிக்கட்டடங்கள் 2014இல் கட்டுவதற்கும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இவ்வாறு வானுயர நவீன வசதிகளுடன் கட்டடங்கள் அமைப்பதற்கு மாறிவரும் அரசாங்கமும், கல்லூரி அதிபர்களின் முயற்சியும் நாம் என்று நன்றி உணர்வோடு நினைவுகொள்ளவேண்டும்.

## பாடசாலையும் பழைய மாணவர்களும்

இலக்கியங்களில் பல புலவர்கள் சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்ததாக வரலாறு கூறுகின்றது. அதுபோல இந்துவின் பழைய மாணவர்கள் தாம் வாழும் தேசங்களில் பழைய மாணவர்கள் அமைப்புகளை உருவாக்கி ஒன்று கூடலாக ஆரம்பத்தில் உருப்பெற்று காலப்போக்கில் அவை பாடசாலை தேவைகளை அறிந்து அதற்கு ஏற்ப பல தேவைகளை பூர்த்தி செய்துகொண்டிருக்கிறது.

பழைய மாணவர் சங்கங்களில் தாய்ச்சங்கமாக கொழும்பு சங்கத்தை குறிப்பிடலாம். இவர்கள் காலம் காலமாக பாடசாலைக் கட்டடங்களுக்கு வர்ணம் பூசுதல், பாடசாலைத் தளபாடங்கள், நூல்கள் மற்றும் சுற்று மதில் அமைத்தல், பாடசாலை விழாக்கள் போன்ற பலவற்றுக்கு நிதிகளை அனுப்பி பாடசாலையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக திகழ்ந்தனர். தொடர்ந்து இலண்டன் பழைய மாணவர் சங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்வைத்து எல்லாச் சங்கங்களிலும் பார்க்க மிகக் கூடிய நிதிப் பங்களிப்பை பாடசாலைக்கு செய்திருந்தது. குறிப்பாக பாடசாலையில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டுக்கு கீழ் இருக்கும் மாணவர்களுக்கு நிதிஉதவிகளை வழங்கி பெரும் தொகையை வைப்பிலிட்டு அதில் இருந்து வரும் வட்டியில் மாணவர்களுக்கு மாதம் மாதம் 300 ரூபா கொடுக்கிறார்கள். மேலும் பல இலட்சக் கணக்கில் கல்லூரிக்கு கணினி உபகரணங்களும் அதற்கு ஒரு கணினி அறையும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இதில் பெரும்பாலான கட்டட நிதி உதவி இந்துவின் யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர்களால் உதவி செய்யப்பட்டது. மேலும் மாணவர்கள் தங்குமிட விடுதி புனரமைக்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலைக்குத் தேவையான மேலதிக காணிகளை கொள்வனவு செய்வதற்கும், பாடசாலைக்கு அருகில் புதிய அதிபர் குடியிருப்பு வளாகத்துக்கு தேவையான வீடு ஒன்றையும் கொள்வனவு செய்துள்ளது. இதற்கு மேலாக பாடசாலையில் கற்கை உபகரணங்கள் பலவற்றை கொள்வனவுசெய்வதற்கும் மேலும் பாடசாலை விடுதி அபிவிருத்திக்கு என பல இலட்சம் ரூபாவை வைப்பிலிட்டுள்ளது. இதற்கு மேலும் வலுச் சேர்க்க பல பழைய மாணவர்களின் தனிப்பட்ட நிதி உதவியில் இருந்து பல திட்டங்களை நிறைவேற்றியுள்ளனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களின் தேவைக்காக 30 ஆசனங்கள் கொண்ட சொகுசு வண்டி மடிக்கணணிகள், மறைந்த அதிபர் P.S.குமாரசுவாமி பூங்கா, மேலும் விடுதி சமையல் அறைக்கு தேவையான தளபாடங்கள், மற்றும் வைரவர் கோயில் புனருத்தான நிதி, மற்றும் தற்போது மாணவர்களுக்கு புதிய மலசல கூடம் என்று பல இலட்சக்கணக்கான ரூபாய்க்களை பாடசாலைக்கு அள்ளி வழங்கி வருகிறார்கள். சுவிஸ் பழைய மாணவர் சங்கம் விடுதி சமையல் அறையை புதுப்பித்துக் கொடுத்துள்ளார்கள், கனடிய சங்கம் குறிப்பாக பாடசாலை விளையாட்டு மைதான விஸ்தரிப்பிற்காக காணி கொள்வனவு செய்ய நிதி உதவியும், அவுஸ்ரேலிய பழைய மாணவர்கள் பெரும் பகுதி நிதியை மாணவர்கள் புலமைப் பரிசில்களுக்கும், பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும், நிதி உதவிகளையும் செய்து வருகின்றனர். இவ்வாறு பூமிப்பந்தில் பரவி வாழும் பல பழைய மாணவர்கள் பலவித உதவிகளை செய்து வருகின்றார்கள். பாடசாலை வளர்ச்சியை தமது வளர்ச்சியாக கருதி அல்லும் பகலும் பல செயற்திட்டங்களை தீட்டி செயற்பட்டு வருகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் நாம் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

04) பாடசாலையும் - விளையாட்டு அபிவிருத்தியும்

மாணவர்களின் தேக ஆரோக்கியத்தையும், அவர்களின் திறமையை வெளிப்படுத்தவும் இல்ல மெய்வல்லுனர் போட்டிகளும், துடுப்பாட்டம் உதைபந்தாட்டம் என்றும் பல போட்டிகளை உருவாக்கி மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்துகிறார்கள். இந்த வகையில் பழைய மாணவர் சங்கங்கள் விளையாட்டு உபகரணங்கள், அதற்கு தேவையான நிதியுதவி மற்றும், பயிற்று விற்பார்களாக பங்கு பற்றி மாணவர்களை ஊக்கப்படுத்துகிறார்கள். குறிப்பாக இன்றும் அன்றும் மெய்வல்லுனர் போட்டிகளில் பலசாதனைகளைப் படைத்து இன்று நாடுகள் பல கடந்தும் கல்லூரியின் பெயரைப் பரப்பிக்கொண்டு உள்ளார்கள். மேலும் ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்ற தயாராகி வருவதை இட்டும் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

### 05) பாடசாலையும் - சமூகமும்

பாடசாலைக்கு வரும் ஒவ்வொரு மாணவனும், ஒவ்வொரு மாவட்டத்திலும், கிராமத்திலும் இருந்து வருகின்றார்கள். அவர்கள் தாம் சார்ந்த கிராம அபிவிருத்திக்கும், அதனை ஒட்டி மாணவ கல்வி அபிவிருத்திக்கும் உதவி செய்கிறார்கள், குறிப்பாக இலங்கையில் நடந்த யுத்தம் காரணமாக எமது பாடசாலை அகதி முகாமாகவும், பல மாணவர்கள் இடம் பெயர்ந்து பல மாவட்டங்களுக்கும் சென்று அகதிகளாகவும், தற்காலிக கல்வி நடவடிக்கையிலும் பங்குபற்றினார்கள். இதன் பயன் அவர்கள் அந்த பாடசாலைக்கும், சமூகத்திற்கும் தங்களினால் ஆன பணியைச் செய்கிறார்கள். அதன் பயனாக கிளிநொச்சியில் மன வளர்ச்சி குன்றியவர்களிற்கான பாடசாலை, முல்லைத்தீவில் ஆரம்ப பாடசாலை, வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள மாணவர்களுக்கு பல்கலைக்கழக மாணியம், பாடசாலை உபகரணங்கள், மற்றும் நூற்றிற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புக்கள் மறைந்த ஆசான் மகாதேவாவின் நினைவாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இதற்கு மேலாக 25 மாணவர்கள் பாடசாலை விடுதியில் தங்கி கல்விகற்று வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் போரின் போது தாய், தந்தையரை இழந்தும். காயப்பட்டும் பாரிய மனக்காயங்களுடன் இங்கு தங்கி கல்வி கற்கிறார்கள். இவர்களின் மேம்பாட்டிற்காக எமது பழைய மாணவர்கள் சிலர் மாதம் மாதம் நன்கொடை தந்து அவர்களை ஊக்கப்படுத்துகிறார்கள். பாரிய சுனாமி அழிவில் எமது பழைய மாணவர் சங்கம் மருத்துவ உதவி, ஆடை, மற்றும் கண்ணீர் துளி ஊடாக நிதி என்று அள்ளிக் கொடுத்து உதவி செய்தார்கள், செய்து கொண்டு இருக்கிறார்கள்.

### 06) பாடசாலையும் - எதிர் நோக்கும் சவாலும்

கடந்த 30 ஆண்டுகளாக சூழ்ந்திருந்த யுத்த மேகத்தில் யாழ் கல்விச் சமூகம் பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளது. யாழ் இந்துக் கல்லூரியும் இதற்கு விதி விலக்கல்ல. கொடுத்த உயிர்கள் விலை மதிப்பற்றவை. பல ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்களை நாம் பலி கொடுத்துள்ளோம்.

யாழ் இந்துவும் தமிழர் வாழ்வுரிமையும் ஒன்றாக கலந்துள்ளது. இன்றும் போரின் வடுக்களை சுமந்த வண்ணம் பல மாணவர்கள் தமது கல்வி நிலையான நிர்வாகத்தை கல்லூரி ஏற்படுத்த முடியவில்லை. பாடசாலைச் சூழல், மாணவர்களின் மன மாற்றம் ஆசிரியர்களின் பணியிட மாற்றங்கள், இடப்பெயர்வு அரசியல் தலையீடுகள் சில பழைய மாணவர்களின் தலையீடுகள் என்று பல வழிகளில் பாடசாலை நிர்வாகத்திலும் மாணவர்களின் கல்வி நிலையிலும் தலையீடுகளை ஏற்படுத்தி பாடசாலை சற்று ஸ்தம்பிதம் அடைந்து இருந்தது. மேலும் ஒழுங்கான திட்டமிடல் இன்மை, ஒரு காத்திரமான பாடசாலை மாணவர்கள் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கொண்ட ஒரு வலுவான அமைப்பை உருவாக்கி அதனூடாக தமது தேவைகளை முன்னேடுக்க தவறிவிட்டது. இதனால் நிர்வாக நம்பிக்கையின் களைத்தெறிந்து ஒரு காத்திரமான திறந்த நிர்வாகத்தின் மூலம் பல அபிவிருத்தி திட்டங்களை பழையமாணவர்களை ஒரு முகப்படுத்தி கல்லூரி மேலும் பல வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கியிருக்க முடியும். என்பது பல பழையமாயவர்களின் கருத்தாகும். பாடசாலைக்கு பழைய மாணவர்களுக்கும் இடையிலான பனிப்போரில் பாடசாலை இழந்தது பல இன்னும் இழந்து கொண்டிருப்பது பல.

இலண்டன் பழைய மாணவர்களால் அனுப்பப்பட்ட விடுதி அபிவிருத்தி நிதி இன்னும் அதன் தேவைகளுக்கு பயன்படாமல் நிர்வாகத்திற்கும் யாழ் பழைய மாணவர்களுக்கும் மிடையிலான போரால் நாம் மேறகொள்ள வேண்டிய பல பணிகள் முடங்கிக் கிடக்கின்றது. இதனால் பல மாணவர்கள் பல உதவிகளை முன்வந்து செய்ய தயங்குகின்றார்கள். இவ்வாறான மனக்கசப்புகள் கிள்ளி எறியப்பட்டு பாடசாலை நலநன முன் நிறுத்தி தங்களிற்கிடையிலான வேறுபாடுகளைக் கழைந்து செயற்பட வேண்டும் என்ற வேண்டு கோழை பழைய மாணவர்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

### 07) பாடசாலையும் - 125 ஆண்டு விழாவும் 2015

பாடசாலைகள் நூற்றாண்டு விழா 1990 ஆம் ஆண்டு சிறப்பான முறையில் பாடசாலை மட்டத்தில் மட்டும் கொண்டாடப்பட்டது. நாட்டில் இருந்த போர் சூழல் காரணமாகவும் மாணவர்களின் இடப்பெயர்வு காரணமாகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொண்டாடப்பட்டது. ஆனால் 2015 நாம் 125 ஆண்டு விழாவை வெகு விமரிசையாக கொண்டாட 2014 இல் இருந்தே விழாக் குழுவை நிறுவி பழைய மாணவர்களை ஒன்றினைத்து வெகு விமரிசையாக பாடசாலை வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைய கலை, கலாசார விழுமியங்களை பிரதிபலிக்கும் ஒரு மாபெரும் தமிழர் விழாவாக நடத்த வேண்டும் அதற்கு பிரித்தானியா பழைய மாணவர் சங்கம் தோளோடு தோள் கொடுத்து செயல்பட தயாராக உள்ளது. இந்த தருணத்தில் பாடசாலை நிர்வாகம் ஒரு நிலையான காத்திரமான விழாக்குழு சபையை உருவாக்கி திறம்பட செயலாற்ற வேண்டும் என்பதே எல்லோருடைய அவா.

இத்தருணத்தில் பாடசாலையின் நீண்ட நாள் தேவையான விளையாட்டு மைதானம், மைதானத்துடன் ஒன்றி அரங்கு மற்றும் 125 ஆண்டு விளைவு என்பன எம் கண்னே விரிந்து கிடக்கும் பாரிய திட்டங்கள் இதற்கு சகல பழைய மாணவர் சங்கங்களும் ஒரு குடையின் கீழ் வேலை செய்து. இதனை முடிப்போமாக இருந்தால், இது தான் எமது இந்து அன்னைக்கு 125 ஆண்டில் நாம் கொடுக்கும் பரிசாக அமையும் இதன் மூலம் பாடசாலை சகல வழிகளிலும் ஓர் சர்வதேச பாடசாலைக்குரிய அடையாளங்களுடன் அடுத்த தலைமுறைக்கான வாசல் கதவைத் திறக்க முடியும் என்பது எல்லோருடைய கனா! அதனை நனவாக்க நாம் எல்லோரும் ஒன்றினைந்து ஒற்றுமையாக செயல்படுவோம் என்று கூறி இந்தக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

"தலைநிமிர் கழகமும் இதுவே
"தமிழர் தலை நிமிர் கழகமும் இதுவே"

❒❒❒

# தொடர்பாடல்

**K SivagurunathaPillai**
(Old boy JHC 1951-61)
Director Tamil Academy of Language & Arts – London,
Principal Examiner Cambridge ASSET Languages TAMIL,Principal Examiner London Edexcel iGSCE Tamil Language,Examiner Cambridge iGCSE-Tamil Language,Interpreter translator DPSI-LC,
European Award for Languages 2007 -Winner



மனிதர்களுக்கு ஏற்படுகின்ற தேவைகள், அவர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றது. மனிதர்களில் சிலர் சிந்தித்துச் செயலாற்ற முனைகின்றனர். அவர்கள் நாளுக்கு நாள் தங்களுடைய பலவீனங்களைத் தாம் வாழ்ந்த, வாழுகின்ற சூழலின் அனுபவத்தின் மூலம் அறிந்து, தங்களுடைய அனுபவத்தையும், உணர்வுகளையும், செய்திகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கின்றார்கள். அதன் விளைவாகவே, பல்வேறு புத்தகங்கள், சஞ்சிகைகள், ஒலி, ஒளி நாடாக்கள், இறுவட்டுக்கள் வெளிவருகின்றன. இவற்றை மக்கள் பயன்படுத்துவது குறைவாகவே காணப்படுகிறது. தகவல்களை ஒருவருக்கொருவர் பரிமாறுவதன் மூலம் தமது செயல் முடிவுகளை நல்ல முறையில் ஆற்றிக் கொள்ளலாம்.

தனிநபர் ஒருவர் தன்னுடைய தொடர்பாடலை பின்வரும் முக்கிய தேவைகளுக்காக பயன்படுத்துகிறார்:

01. சுற்றியுள்ள சூழலைப் புரிந்து கொள்வதற்கு
02. தேவையைப் பூர்த்தி செய்வதற்கு
03. செய்தியைச் சொல்வதற்கு
04. சிந்தனையைத் தெரிவிப்பதற்கு
05. அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு.

## சூழலைப் புரிந்து கொள்வது...

ஒரு குழந்தை பிறந்த கணம் முதல், தன் ஐம்புலன்களால் உணரப்படுபவைகளை பயன்படுத்தித் தன்னைச் சுற்றியுள்ள சூழலைப் இயலுமானவரை அவதானித்து, தனக்குத் தேவையான தகவல்களை இயற்கையாகவே தன்னுடைய மூளையில் பதிந்துகொள்கின்றது. உதாரணமாக: தன்னுடைய தாயின் தொடுகை, சூழலின் பௌதீகத் தன்மைகளான வெப்பம், குளிர், காற்றுப் போன்ற உணர்வுகளை உள்வாங்கி கொள்கின்றது. உள்வாங்கப்பட்ட தகவல்களைத் தன்னுடைய உடல் அமைப்புக்கு

ஏற்ப அனுபவமாக, தனக்குள் சேகரித்து வைக்கின்றது. இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற தகவல்களின் தன்மையானது குழந்தையின் பிறப்பு இயல்பில் பெரிதும் தங்கியுள்ளது. இங்கு தொடர்பாடற் செய்முறை என்பது தகவல் சேகரிப்பு என்ற வகையில் முதல் முதல் ஆரம்பித்து, வளர்ந்தவர்களில் இச்செயற்பாடு மொழியின் உதவியோடு கேள்விகள் கேட்பதூடாக இறக்கும் வரை தொடர்கின்றது.

## தேவையைப் பூர்த்தி செய்வதற்கு...

குழந்தை தனக்குப் பசிக்கும் போது, பசி என்று உணர்த்துவதற்கோ, அல்லது தனக்குத் தேவையான ஒரு பொருளை பெற்றுக்கொள்வதற்கோ, அல்லது இன்னொருவரிடம் இருந்து சேவை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கோ, ஒலியேழுப்பி அழுவதன் மூலமாகவோ, அல்லது கைகள், கால்களை அசைப்பதன் மூலமாகவோ தொர்பாடலை மேற்கொள்கின்றது. பின்னர், மொழியைப் பயில்வதன் மூலமும், தொடர்பாடல்த் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன.

## செய்தியைச் சொல்வதற்கு...

குழந்தை முதல் பெரியவர்கள் வரை அனைவரும் தாம் வாழும் சமூகத்தில் தமக்குக் கிடைக்கும் செய்தியை, அல்லது புதிய தகவலைத் தம்மைச் சூழ உள்ளவர்களுக்குத் தெரிவிப்பதற்கு, தொடர்பாடலில் அடுத்த செயல் முறையான செய்தியைச் சொல்லுதல், அதாவது: வெறும் செய்தியைக் கடத்துதல், என்பது பயன் படுத்தப்படுகின்றது.

## சிந்தனையைத் தெரிவிப்பதற்கு...

ஒருவர் தன்னுடைய அனுபவம், மற்றும் படைப்புத்திறன், ஆய்வுத்திறன் என்பன ஊடாகத் தனக்குள் எழுகின்ற ஒரு புதிய சிந்தனையை, கண்டறிவை வெளிப்படுத்துவதற்குத் தொடர்பாடலில் அடுத்தான சிந்தனையை வெளிப்படுத்தல், தெரிவித்தல் என்ற தொடர்பாடல் செயல் முறை பயன்படுத்தப்படுகின்றது.

## அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு...

ஒருவர் தன்னுடைய அனுபவத்தைப் பகிர்தல் என்னும் போது, தான் உணர்ந்து தெளிந்தவற்றைப் பிறருக்கு உதவும் வகையில் வெளிப்படுத்தற் செயற்பாடாகும். இது, சிறிய அளவில் இடம்பெறும் போது நனிநபருடனான உரையாடல்களாகவோ, அல்லது குழு ரீதியான கலந்துரையாடல்களாகவோ, ஊடகமூலமாகவோ, மக்கள் தொடர்பாடற் செயல்முறையாகவோ அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வது இடம்பெறுகின்றது.

மனித இனமானது சிறு சிறு தனிக் குழுக்களாக உலகம் முழுவதும் பரவியிருந்த வேளையில் தொடர்பாடலின் தேவை என்பது, குறிப்பிட்ட குழுவின் தேவையை மட்டும் திருப்தி செய்வதாக இருப்பது போதுமானதாக இருந்திருக்கும். ஆனால், இன்று மனிதக்குழுக்கள் பல்கிப்பெருகி, மனித குழுக்களுக்கு இடையிலான தொடர்புகள் விரிந்து, ஒவ்வொரு குழுக்களும், விரும்பியோ விரும்பாமலோ, ஒரு குழுவானது மற்றைய குழுவில் பொருட்கள், சேவைகள் என்பவற்றுக்காக ஒன்றில் ஒன்று தங்கியிருந்து, வாழ் நாட்களைக் நகர்த்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக, ஒரு வேலையை செய்வதற்காக, ஒவ்வொருவரும் தங்களைச் சுற்றி என்ன நடைபெறுகின்றது என்ற நளாந்த விடயங்களை அறியவேண்டியிருப்பது தவிர்க்க முடியாததாகின்றது. இது மட்டுமல்ல. ஒவ்வொரு மனிதர்களும் தங்களுடைய அறிவினை வளர்த்துக்கொள்வதற்கும், கிடைக்கும் ஓய்வு நேரத்தை ஒவ்வொருவரும்

தங்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் செலவு செய்யவும், தொடர்பாடற் செயல்முறையும், தொடர்பாடல் சார்ந்த ஊடக உத்திகளும் அவசியமாகின்றன.

பொதுவாகக் கூறினால், ஒரு நாட்டின் சிறப்பான ஆட்சிக்காக சட்டங்கள் இயற்றப்படுகின்றன. சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களால் குற்றங்களின் தன்மைக்கு ஏற்ப குற்றவாளிகளுக்கு தண்டனைகள் வழங்கப்படுகின்றது. தண்டனைகளில் பலவகைகள், அவற்றில் குற்றவாளியை சிறையில் அடைத்தல் என்பது ஒருவகை. அதாவது குற்றவாளியை உற்றார் உறவினர்கள் நண்பர்களிடம் இருந்து தனிமைப்படுத்தி வைப்பதே சிறையில் அடைத்தல். இத்தண்டனை ஊடாக குறிப்பிட்ட குற்றவாளியின் தொடர்பாடல் துண்டிக்கப்படுகின்றது என்பதே ஆகும். நபர் ஒருவரின் தொடர்பாடலைத் துண்டிப்பது என்பது உயர்ந்த பட்ச தண்டனையாக கருதப்படுகின்றது. இது தொடர்பாடலின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு போதுமான சான்று என்பதைப்புரிந்து கொள்ளவும்.


அன்றாட வாழ்வில் எடுக்கப்படுகின்ற முடிவுகள், செயற்பாடுகள் என்பன, ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையிலேயே அமைகின்றன. ஏனெனில், மற்றவர்களில் தங்கிவாழும் இன்றைய பொருளாதார, அரசியல் முறைமைகள், முடிவுகள் எடுப்பதற்குத் தகவல்கள் இன்றிமையாதவை என்ற ஒரு பலவீனமான நிலையில் மக்களை வைத்துள்ளது. சரியான பல தகவல்களைக் கொண்டவர் பொதுவாகத் தன்னுடைய முடிவுகளைச் சரியாக எடுப்பதையும், ஏனையவர்கள் தங்களின் முடிவுகளால் சில சந்தர்ப்பங்களில் துன்பத்திற்கு ஆளாகுவதையும் அனுபவத்தில் கண்டிருக்கின்றோம். தொடர்பாடல் இல்லாமையால் மனஉழைச்சல் ஏற்படுகிறது. இன்று இங்கிலாந்தில் பல தமிழர்கள் மன உழைச்சாலால் அலைகிறார்கள். தமது குறைகளை மற்றவர்கள் அறியக் கூடாது என மறைத்து வைத்து பின் அது பூகம்பமாகப் வந்ததும் கலங்குகிறார்கள்.

தகவல்கள் சரியாக கிடைக்காது துன்பப்படுபவர்களுக்கும், தகவல்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாது துன்பப்படுபவர்களுக்கும், தொடர்பாடல் பற்றிய அறிமுகம் பெரும் உதவி புரியும். அன்றாட வாழ்வில் முக்கியமான ஒன்றைப் பற்றி அறிந்து கொள்வதும், புரிந்து கொள்வதும் ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமான செயற்பாடு ஆகும். இது இன்பமான குடும்ப வாழ்விற்கு வழிவகுக்கும்.

இத்தொடர்பாடல் வழிமுறையை இங்கிருக்கும் யாழ்இந்து மைந்தர்கள் நமது யாழ்மண்ணில் யாழ்இந்துவில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுடன் தொடர்பாடலை ஏற்படுத்தி அவர்கள் முன்னேற்றத்திற்கும், அவர்கள் வருங்காலத்திற்கும் வழி வகுக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோளும் இக்கட்டுரையின் நோக்கமும் ஆகும். இன்றைய தொழில் நுட்ப வசதியில் கணப்பொழுதில் நாம் யாழ்இந்து மைந்தர்களுடன் தொடர்பாடலை ஏற்படுத்தலாம். எமது சிந்தனைகளை அறிவையும் அவர்களுடன் பரிமாறலாம். நாமெல்லாம் யாழ்இந்து வளர்த்தெடுத்ததால் இன்று பலர் நல்வாழ்வும் புகழும் அடைந்துதிருக்கிறோம். அதேபோல அவர்களும் வளரவேண்டும் ஒவ்வொரு யாழ்இந்து பழைய மாணவர்களும் தமது யாழ்இந்து மண்வாசனையை மறக்கக் கூடாது. இங்கும் அங்கும் மக்களின் மனஉழைச்சைலப் போக்குவதற்கு மக்களிடையே ஆக்க பூர்வமான தொடர்பாடல் வேண்டும்.

இத்தமிழ் அறிவைத் எனக்குத் தந்துதவிய யாழ் இந்து ஆசிரியர்கள் திரு சிவராமலிங்கம் வித்துவான் கார்திகேசு, பண்டிதர் செல்லத்துரை, திரு சிவசுப்பிமணியம், 'போடிங் மாஸ்டர்' கே எஸ் சுப்பிரமணியம் அவர்களுக்கு எனது வணக்கம்.

❒❒❒



# My memories of the boarding life at Jaffna Hindu College Hostel

(1956 – 1965)

**Nadesapillai Selvarajasingam**
B.Sc (Hons) Eng., M.Sc Eng., C.Eng M.I.C.E (Lond)
Ex President and a Patron JHC OBA (UK).

I was pleased to be requested to write an article about my time at our college. Instead of writing about my achievement s at the school, I thought I will write about my life experience at the College Hostel.

I hail from a beautiful and an agricultural village called Thunukkai on the edge and within the Jaffna District boundary in those days at 75 miles away. For many children in these far away villages, a good and higher education is only a distant dream. I was lucky to have admissions to boarding schools for my education. I was firstly boarded to Chahavachcheri Hindu College for my primary school education at the age of eight.

I then joined Jaffna Hindu College in 1956 at 6th Standard and I was boarded there until I completed my A/L studies in 1965. The hostel back then was a very big institution and had more than 300 boarders who came not only from all over the Jaffna peninsula and the adjoining islands but also as far as Trincomalee, Baticaloe, Vavuniya, Hatton and Colombo.

The boarding accommodation had three sections. Firstly the junior boarding and this was for the students for year 6 to 9 (JSC Certificate level). This was the hostel above the dining area that is still functioning. The second section was for the students from year 9 until one complete the G.C.S.E O/L. This section was then called the old boarding. All A/L students were housed in various rooms mainly in the wing dormitory that was adjacent to the college entrance at the College Road.

The discipline of all was the paramount important in the hostel. The boarding master was late Mr K.S. Subramaniam popularly known as KSS and his efficient assistant was late Mr Namasivayam. We always got scared if someone mentioned that Mr KSS was around. He would cane us if anyone was identified with any mischievous. For this purpose alone he had three canes ranked from No:1 to No:3. Mr Namasivayam was the backbone of the administration. He kept the accounts and was responsible for all expenditures that included the food for all three times a day seven days a week. Not to mention the tea we get in the afternoons during weekends.

These two individuals were true gentlemen who have been instrumental in many ways in creating many educational professionals over the decades. I salute them for the services they rendered over the years.

Lunch time was always very busy as usually there were day scholars including number of teachers who used to join us for the Lunch. We had dedicated cooks who provided us with nutritious and tasty vegetarian food at all times. Not to mention the 'Payasam' we get on Friday lunch times. Special days were always the school A/L union dinner where we invite A/L student union members from other schools for annual dinner.

Being a boarder, I had the opportunity to play football, cricket, and volley ball games right through the season. I was the athletic captain of 'Casipillai House' in year 1964 and the colour winner of the school first eleven football team. I was also a member of the school scout troupe who won the first place in the golden Jubilee Jamboree.

The boarding master used to appoint boarding prefects from time to time and I was one of them and I also became the senior prefect during my A/L studies. To become a prefect, one has to join the garden club first. We used to maintain four gardens in front of our hostel and additionally with a small scale banana plantation in the land in front of the old proposed Vairavar Kovil. This Kovil was next to the old woodwork class building and had the foundations only at that time. We were also instrumental in creating a science garden at the land behind the old lavatories.

Then one would be promoted to become a prefect first to manage the bathing hours in the morning of all 300 or so borderers. The Leadership qualities were identified during this period and then only one would be promoted to be a Hostel Prefect by the Hostel Master.

The Hostel was our second home for many of us and we would go back home during the term holidays only. The school has benefited in many ways as almost all the functions held at the College would be arranged and organised by the boarders. During that period we had the privilege of helping with the concreting of the Cumarasamy Hall first floor slab and other construction works of that building. Most of us will remember these days for the rest of our lives.

The Hostel Bell will always go at 5 o'clock for us to rise and then there would be study time in the early hours which was compulsory until bathing and breakfast time. Likewise we had an evening study time after the evening play hours between 4.00 and 6.00 pm. The evening study time was split into two halves, first half for the juniors and the both halves for the seniors that ended at 10.00 pm.

The opportunity that I had in staying in the hostel and receiving the good education has made me what I am today. I am sure there are many more who have benefitted like myself. There are also many who have become scholars only because of the facilities and the environment we had at this great school and hostel. I spent ten years of my life here and every moment of this will be cherished by me for the rest of my life. My only wish is that this great institution will be re-established to the full glory of the past, and then only can our college become a true national institution again.

❒❒❒

# எங்கே செல்கிறது யாழ்ப்பாண கல்வி?

## பி. பிரதீஸ்



கல்வியில் கொடிகட்டிப் பறந்த யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை இன்று மிகவும் மோசமாகவே காணப்படுகிறது. இதற்கான காரணங்களை சற்று விரிவாக நோக்குவோம்.

### பிரயோக மற்றும் பரிசோதனை வாயிலான கல்வியின் முக்கியத்துவத்தை உணரத் தவறிய கல்விச் சமூகம்

இன்றைய கால உயர்கல்வி பிரயோக ரீதியான, பரிசோதனை ரீதியான கற்றல் கற்பித்தலையே அடிப்படையாகக் கொண்டது. இதன் அடிப்படையிலேயே உயர்தரப் பரீட்சைகளும் வினாக்களை கொண்டமைந்துள்ளன. எனினும் பல பாடசாலைகளிலும், கல்வி நிலையங்களிலும் இது தொடர்பான கற்பித்தல்கள் முன்னெடுக்கப்படுவதில்லை. பாடசாலைகளில் உள்ள பரிசோதனை அறைகளில் வளப்பற்றாக் குறைகளும், ஆசிரியர்களின் அசண்டையீனமும், மாணவர்களின் மனோபாவமுமே இதற்குரிய காரணங்களாகும். இவற்றுள்ளும் முக்கிய பிரச்சினையாக இருப்பது வளப்பற்றாக்குறையே.

எமது கல்லூரியில் கூட இந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. உயர்தரத்துக்கு கீழ் உள்ள வகுப்புக்களுக்கான பரிசோதனை அறைகள் ஆய்வு கூடங்களிலாவது ஓரளவு ஆய்வுகூட உபகரணங்கள் காணப்படுகின்றன. ஆனால் உயர்தர மாணவர்களுக்கான உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் எனும் முன்று பாடங்களுக்குமான ஆய்வுகூடங்கள் போதிய வசதிகள் இல்லாமல் காணப்படுகின்றன. உண்மையில் உயர்தர மாணவர்களுக்கான ஆய்வுகூடங்களே மிக சிறப்பான முறையில் இயங்க வேண்டும். இதை கல்லூரி நிர்வாகம் உணரத் தவறியிருக்கிறது என்று தான் கூற வேண்டும். குறிப்பாக இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆய்வுகூடங்கள் தான் தேவையான உபகரணங்கள், இரசாயன பொருட்கள் பற்றாக்குறையுடன் காணப்படுகிறது. இதனால் உரிய அளவுகளிலும் உரிய முறைகளிலும் பரிசோதனைகளை வாய்ப்பு பார்க்க மாணவர்களால் இயலாது உள்ளது. தற்போதய வினாத்தாள்களில் பரிசோதனை வாயிலான வினாக்களுக்கு விடையளிப்பதும் சற்று கடினமானதாக அமையும்.

அதிக ஆதரவுகள் உள்ள எமது கல்லூரியிலேயே இப்படியான நிலைகள் காணப்படின் பின்தங்கிய பாடசாலைகளைப் பற்றி சொல்லத் தேவையில்லை. எனவே தான் சகல பாடசாலைகளிலும் பரிசோதனைகள் வாயிலான கல்வி முறைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு உரிய முறையில் கற்றல், கற்பித்தல்கள் நடைபெறலானது பெறுபேறுகளை உயர்த்துவதற்கான வழிமுறை ஒன்றாகும்.

### தொலைபேசிப் பாவனையும் காதல் கலாசாரமும்

இன்று மாணவர்களிடையே தொலைபேசிப் பாவனை ஒரு கலாசாரமாகவே மாறிவிட்டது. கல்வி நிலையங்கள் தொடக்கம் பாடசாலைகளிலும் கூட இந்த கலாசாரம் உருவெடுத்துள்ளது. நவநாகரீக மாற்றத்தில், தொழிநுட்ப சாதனங்கள் மீதான கவர்ச்சி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை தடைப்படுத்தி படுகுழியை நோக்கி வழிநடத்தி செல்கின்றது.

இந்த விடயத்தில், மாணவர்களின் எண்ணங்களே தவறான எண்ணக்கருவை வளர்த்து விட்டுள்ளது. தொலைபேசி பாவிக்காவிட்டால் தாம் தரம் குறைந்தவர்கள் அல்லது தொலைபேசி பாவிப்பதால் குறிப்பாக வசதிகள் கூடிய தொலைபேசிகள் பாவிப்பதன் மூலம் சக மாணவர்களிடையே சிறந்த வரவேற்பை பெற முடியும் என கருதுகிறார்கள். எனினும் இந்த தொலைபேசி பாவனை இளவயது இருபால் ஈர்ப்பிலும், அதாவது இன்றைய மாணவர்கள் காதல் என்று தாமே சொல்லிக் கொள்ளும் புதிய கலாசாரத்தை சமூகத்துள் புகுத்தியுள்ளது.

ஒரு தலையாக விரும்புபவர்கள் தம் விருப்பத்திற்குரியவரை காண வீதிகளில் அலைவதும், கற்பித்தல் நேரங்களில் காதல் கலாசாரத்தில் மூழ்கியும், அதாவது வாழ்க்கையை தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். தம் விருப்பத்திற்குரியவர் களுக்காக பாடங்களின் ஆசிரியர்களை மாற்றிக் கொள்வதும், சில பாடங்களுக்கு செல்லாது விடுவதும் இன்று வழமையாகி விட்டது. அதிலும் இருதலைக் காதலர்களின் அட்டகாசம் உச்ச அளவில் இருக்கிறது. வகுப்ப நேரங்களிலும் கூட நேரடியான உரையாடல்களும், தொலைபேசி உரையாடல்களும் காதல் எனும் பெயரில் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கிறது. இது அருகிலிருக்கும் சக மாணவர்களையும் பாதிக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் காதல் செய்தால் தான் குறித்த உயர் தரத்துக்கான அடையாளத்தை பெற முடியும் என பலரும் நினைக்கின்றனர் இந்த காதல் கலாசாரம் இன்றைய கால மாணவர் சமுதாயத்தை மட்டுமன்றி வருங்கால மாணவர் சந்ததி வரை தொற்றுநோயாக பரவியுள்ளமை தான் யாழ்ப்பாணத்தின் எதிர்கால கல்வி பற்றி பயம் கொள்ள வைத்திருக்கின்றது. காதல் கலாசாரத்தின் முக்கிய பிரச்சினைகள் சிலவற்றையும் இங்கு சொல்லியே ஆக வேண்டும். சக மாணவர்களிடையேயான விரிசல்கள்,ஆசிரியர்களின் அபிமானத்தையும் ஆதரவையும் இழத்தல் ,பெற்றோர்களின் நம்பிக்கைக்கு அவதூறு விளைவித்தல் போன்றவற்றால் மன அழுத்தங்களை சம்பாதித்து கொண்டு உள்ளனர்.

இன்றைய கால மாணவர்கள், சமுதாயத்தின் கட்டுப்பாடுகளை மறுக்கின்ற தன்மையும் கலாசார மரபுகளை மறக்கின்ற நிலைமையும் தான் இன்று காணப்படுகின்றது. இது கல்வியின் உண்மையான அர்த்தத்தை அறியாமையாக மூடி மறைத்து விட்டது. காதலுக்காக மட்டுமே கல்வி நிலையங்கள் தேவை என்ற ஒரு மனநிலை இந்ந காதல் கலாச்சாரத்தால் மாணவர் மத்தியில் புகுந்தும் உள்ளது. தொலைபேசி மற்றும் காதல் கலாசாரத்தை விடுத்து வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தையும் கல்வியின் அவசியத்தையும் மாணவர்களாகவே உணர்ந்து செயற்படுவார்களானால் பல மடங்குகளாக கல்விமட்டத்தை உயர்த்த முடியும்.

**மாணவர்கள் மனதளவில் தாழ்வுபடுத்தப்படல்**

பல பாடசாலைகளிலும் கல்வி நிலையங்களிலும் உள்ள ஆசிரியர்களால் ஏராளமான மாணவர்கள் கல்வியில் பின்தங்கிய ஒரு மனோநிலைக்கு தள்ளப்படுகின்றனர். மாணவர்களிடையே பாரபட்சம் பார்க்கின்ற தன்மையும் சிலவேளைகளில் புள்ளிகள் குறைவாக பெறும் போது ஆசிரியர்கள் ஏசுகின்ற விதமும் மாணவர்கள் தமது இலட்சியபாதை தொடர்பான உறுதியான எண்ணத்தை தகர்த்து தம்மை பற்றிய தாழ்வு மனப்பாங்கையும் ஏற்படுத்தி விடுகின்றன.

அதிக புள்ளிகளை பெறும் மாணவர்களை மட்டும் விளம்பரப்படுத்தி தலையில் தூக்கி வைத்து கொண்டாடும் பாடசாலைகளும் கல்வி நிலையங்களும் குறைவான புள்ளிகளை எடுப்பவர்களை கவனித்து, அவர்கள் ஏன் புள்ளிகளை குறைவாக பெறுகின்றனர் என்பதை அறிந்து அதற்குரிய தீர்வுகளை முன்வைக்க தவறுகின்றனர். எல்லோரையும் அப்படி சொல்லிவிட முடியாது. எனினும்

மாணவர்களிடையே சமத்துவமற்ற தன்மையை ஆசிரியர்கள் ஏற்படுத்துவது மாணவர் மத்தியில் விரக்தியையும், சக மாணவர்களுடனான வெறுப்பான தன்மையும் ஏற்படுகின்றது. மாணவர்கள் சிறு தவறுகள் செய்யும் போது கூட தமது இயலாமையை மூடி மறைக்க மாணவர்களின் இலட்சிய கனவை தகர்க்கும் வகைகளில் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு மாணவர்களை அடக்க முற்படும் போது மாணவர்கள் மிகுந்த மன அழுத்தத்துக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர். ஆசிரியர்கள் மீது ஏற்படும் வெறுப்பான நிலை குறித்த பாடத்தையும் வெறுக்க செய்து விடுகிறது.

எனவே, மாணவர்களின் இலக்குக்கு என்றும் வழிகாட்டிகளாக இருந்து, இலக்கு தொடர்பான உற்சாகப்படுத்தும் கருத்துக்களை மாணவர்களுக்கு கூறுதல், தமது கல்வி தொடர்பான நம்பிக்கையை மாணவர்களுக்கு ஏற்படுத்தும்.

## முகப்புத்தகம் (facebook) கற்றுத் தந்த பாடங்கள்

இன்று வலைத் தளங்கள் மீதான நாட்டம் மாணவர்கள் மத்தியில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. கல்வி வீழ்ச்சி, கலாசார சீரழிவுகள், மன அழுத்தப்பாதிப்புக்கள் என சமுதாயத்தின் மீதான வலைத் தளங்களின் தாக்கம் சொல்லி முடியாதன. வலைத்தளங்களில் ஆபாசம் தேடும் பிஞ்சுகள் தொடக்கம் வளர்ந்தவர்கள் வரை சீரழிந்து கொண்டுதான் இருக்கிறார்கள். கெட்ட எண்ணங்களையும் கீழ்த்தனமான சிந்தனைகளையும் தான் மாணவர்களின் மனதில் பதியம் செய்து கல்வியை ஓரங்கட்டி விட்டிருக்கின்றன இந்த வலைத்தளங்கள். இது பிற இனத்தவர்களினதோ அல்லது, பிற தேசத்தினரதோ திசைமாற்றும் செயற்பாடாக கூட இருக்கலாம் என்று தான் எனக்கு தோன்றுகிறது.

குறிப்பாக இன்றைய மாணவர் சமுதாயத்தினுள்ளே நச்சுவேர்களாய் ஊடுருவி இருக்கின்றன முகப்புத்தக தொடர்புகள். பொய்யான முகப்புத்தக தகவல்களை நம்பி ஏமாந்து போன வரலாறுகளையும் கடந்து தான் நாம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முகப்புத்தக படங்களை பார்த்து காதலில் மூழ்கியவர்களும், தொடர்பு மிகுதியால் தற்கொலையில் முடிந்த சம்பவங்களும் நீங்கள் அறிந்ததே. மாணவர்களின் கற்கும் காலத்தை தின்று ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறது இந்த முகப்புத்தகம் என்று தான் கூற வேண்டும்.

இன்று பலரும் பாடப்புத்தகங்களை பார்ப்பதிலும் முகப்புத்தகங்களை தான் அதிகம் நாடுகின்றனர். இதன் மூலம் தோன்றும் தேவையற்ற பிரச்சினைகளால் மன அழுத்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சுய கட்டுப்பாடற்ற பல மாணவர்கள் இதனால் தம் கல்வியையும் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் கூற வேணடும்.

இன்று பல மாணவர்கள் தமது உயர்தரத்துக்கான அடையாளத்தை பதித்துக் கொள்ள முற்படுகின்றனர். அதாவது, தொலைபேசி பாவித்தல், இணையத்தள பாவனை, பாடசாலை, கல்வி நிலையங்களுக்கு அடிக்கடி செல்லாது விடல், மற்றும் பிற தவறான செயல்களில் ஈடுபடல் போன்றவற்றினை தாம் செய்வதன் மூலமே உயர்தரத்துக்கான அடையாளத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்று கருதுகின்றனர். இவ்வாறான சிந்தனைகள் சமூகத்தில் பரவலாக விதைக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களின் மனநிலையை கல்வியிலிருந்து அப்பால் அழைத்து சென்று கொண்டிருக்கிறது எனலாம். உயர்தர கல்விதான் தமது வாழ்க்கை என்பதை அறிந்தும் கூட பல நேரங்களில் மறந்து விடுகின்றனர். முகப்புத்தக மாயையிலிருந்து மாணவர்கள் நீங்கும் வரை அவர்களின் கல்வி மீளுவதும் கொஞ்சம் சந்தேகம் தான்.

**சகபாடிகளால் திசை திருப்பப்படும் மாணவர்கள்...**

தமக்குரிய சிறந்த நண்பர்களை தேர்ந்தெடுக்க தவறுகின்றது இன்றைய மாணவர் சமுதாயம். கல்வியிலும் பிற நல்ல செயற்பாடுகளிலும் தமது நண்பர்களை உற்சாகப்படுத்த வேண்டியவர்கள், சகபாடிகள் தவறான பாதையில் செல்லும் போது அதனை தடுத்து நிறுத்துவதற்கும் தவறுகின்றனர். சிலரோ தாம் தவறான எண்ணக்கருக்களை தமக்குள்ளே வளர்க்கும் போது, தமது நண்பர்கள் தவறை புரியவைக்கவோ அல்லது தடுக்கவோ முற்படும் போது, தமக்கு இவன் பொருத்தமில்லை என விலகுகின்றனர்.

சகபாடிகளின் முன்னேற்றத்தை கண்டு பொறாமைப்பட்டு அவர்களை தவறான வழிக்கு கல்வியிலிருந்து விலத்தி கொண்டு செல்பவர்களும் இருக்க தான் செய்கின்றனர். ஆனாலும் அவர்களின் போலித்தனம் தெரியாமல், அவர்களுடனான நட்பை தொடர விரும்புபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். தவறுகளை திருத்த முற்படுபவர்களை பிரியத்தான் விரும்புகின்றனர். இது கல்வி தொடர்பான பின்னடைவையே விளைவாக்குகின்றது. மாணவர்கள் தங்களது உண்மையான நண்பர்களை இனங்காணுதல் அவசியமாகின்றது.

**வணிகமாகிப் போன கல்வி...**

கல்வி நிலையங்கள் பலவற்றிலு.ம் இன்று கல்வி வணிகமாகிவிட்டது. அதிகரித்த பாடக்கட்டணங்களும் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காத நிர்வாகமும் மாணவர்களை வாட்டி வதைக்கின்றன என்று தான் கூறவேண்டும். அனுமதி அட்டை கொண்டுவர தவறும் பட்சத்தில் கல்விக்காக வரும் மாணவர்கள் திருப்பி அனுப்பப்படுவதும், ஒவ்வொரு பாடத்துக்கும் வெவ்வேறு இடங்களுக்கு மாணவர்கள் அலையவிடப்படுவதும் குறிப்பிட்டே ஆகவேண்டிய முக்கிய பிரச்சினைகளாகும். பல்வேறு கல்வி நிலையங்களும் தமது கற்பித்தல்களே சிறந்தது என கூறி மறைமுகமாக பாடசாலை கல்வி தரம் குறைந்தது என்ற எண்ணக்கருவை மாணவர்கள் மத்தியில் வளர்த்து விடுகின்றனர்.

அன்றைய காலம் தொடக்கம் இன்றைய காலம் வரை வறுமை என்பது இருந்து கொண்டு தான் உள்ளது. எனினும் கல்விக்கு, அதாவது தன் கல்வி தொடர்பான உறுதியான முயற்சி, நம்பிக்கை உள்ளவனுக்கு வறுமை ஒரு தடையில்லை. இன்றைய அறிவியல் உலகிலே சகலருக்கும் கல்வியொன்று தான் மூலதனம் என்பதை ஒவ்வொரு மாணவரும் தாமாகவே உணர்ந்தால் மட்டுமே கல்வியில் உயர்ந்த நிலையை பெற முடியும்.

**என்னதான் செய்வது...**

தடைகளும், பிரச்சனைகளு..ம், திசைதிருப்பங்களுமாக தத்தளிக்கும் இன்றைய,யாழ்ப்பாணத்தின் கல்வி நிலையை உயர்த்த வேறு என்னதான் செய்வது? இவற்றை தீர்த்தால் மட்டும் போதுமா? என்ற கேள்விகளும் எழத்தான் செய்கிறது. நானும் ஒரு மாணவன் என்ற ரீதியில் சிலவற்றை கூறலாம் என விழைகின்றேன்.

முதலில், சிறுவயது முதலே மாணவர்களுக்கு கல்வி தொடர்பாக அறிவுரைகளையும், உற்சாகத்தையும், நம்பிக்கையையும் கொடுங்கள், அழுத்தங்களை திணிக்காதீர்கள். கூடிய புள்ளிகள் பெறுபவர்களுக்கு புகழாரம் சூட்டுவதை விடுத்து குறைந்த புள்ளிகள் பெறுபவர்களை ஆசிரியர் என்ற ஸ்தானத்தையும் தாண்டி பெற்றோர்களாக அக்கறை செலுத்தி அவர்களுக்கு நம்பிக்கையை

ஏற்படுத்துங்கள். சுதந்திரமாக, தனது ஆற்றல்களை வெளிப்படுத்த எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பமளியுங்கள். வயது முதிர்ந்த ஆசிரியர்கள் பழைய காலத்தை பறைசாற்றுவதை விடுத்து, இன்றைய சமுதாயத்தையும் புரிந்து அதன்பால் மாணவர்களுடன் அவர்கள் நிலையிலேயே உணர்ந்து சுமுகமாக கலந்துரையாடி அவர்களுக்கு கல்வி தொடர்பான அறிவுரைகளை வழங்குங்கள். நிச்சயம் கேட்பார்கள். அதை விடுத்து அறிவுரைகளை திணிக்காதீர்கள்.

மாணவர்களை தாங்களாகவே உயர்தர பாடங்களை தெரிவு செய்ய சந்தர்ப்பமளியுங்கள். மாணவர்களின் உரிய வயதுப்பிரிவுக்கமைவாக நூலகத்தை வடிவமைத்து தாராளமாக நூல்களை வழங்குதல் சிறந்தது. மாணவர்களும் நூலகங்களை நன்றாக உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். வறுமையான மாணவர்களிடையே பாகுபாடு காட்டாது சகல விடயங்களிலும் உதவ கல்லூரி சமூகம் முன்வரவேண்டும். இன்று அதிகரித்து வரும் பணவீக்கம் நாளாந்த வாழ்க்கை செலவை பலமடங்கு உயர்த்தி உள்ளது. எனவே, ஓரளவேனும் அதிக பண உதவிகளை, குறிப்பாக உயர்தர மாணவர்களுக்கு வழங்குதல் நல்லது. ஏனெனில், உயர்தர கல்விக்கு தான் இன்று ஏராளமான பணத்தை மாணவர்கள் அல்லது பெற்றோர்கள் செலவிட வேண்டியுள்ளது. பாடசாலைகளால் பழைய மாணவர்களின் உதவியுடன் வழங்கப்படும் புலமைப்பரிசில் மாணவர்களுக்கு ஓரளவேனும் போதியதாக இருக்க வேண்டும்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தடை என்று இல்லாமல் கல்வி வளர்ச்சியை அதிகரிக்க கூடிய கல்லூரி நிர்வாக நடவடிக்கைகளும் பாடசாலைகளால் செய்ய தவறவிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக மாணவத் தலைவர்களை நியமிக்கின்ற காலப்பகுதியையும் குறிப்பிட வேண்டும். உயர்தர வகுப்பில் பரீட்சைக்கு தோற்றும் வருடமே எமது கல்லூரியில் மாணவ முதல்வர் பதவிகள் வழங்கப்படுகின்றன. மாணவர்கள் கல்வியை வேகமாகவும், எந்த வகுப்பையும் தவறவிடாது கல்வி கற்கும் வருடம் முக்கியமாக இதுதான். இப்பதவியுடன் காலத்தை செலவழிப்பதும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை குறைப்பதாகவே உள்ளது. இப்பதவி மாணவர்களிடையே தலைமைத்துவ மற்றும் ஆளுமைப் பண்புகளை வளர்த்தாலும் கூட இவை பிற சில கல்லூரிகளை போல உயர்தர முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வழங்குதல் உசிதமானது. இதனால் உரிய காலப்பகுதிகளில் உரிய பொறுப்புக்களும், கடமைகளும் நிறைவேற்றப்படும். இது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் உதவும்

